கல்யாண முகூர்த்தப் புடைவைகளின்
கைராசியான முன்னணி நிறுவனம்
திருமாட்டி புடைவைக் கடல்
122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

பக்கங்கள்! எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மங்கையர், ஆடவர் மனதைக் கொள்ளை கொள்ளும்
வண்ண வண்ணப்பட்டு, பருத்தி புடைவைக் கடல்
திருமாட்டி புடைவைக் கடல்
122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 தை 03 செவ்வாய்க்கிழமை (17 – 01 – 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 51

# பண்டா-செல்வா ஒப்பந்த அடிப்படையிலான தீர்வுத் திட்டம் தமிழர்களுக்குத் திருப்திதராது!

## கேணல் கிட்டு நினைவு கூட்டத்தில் அன்ரன் பாலசிங்கம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜனவரி 17

"பண்டாரநாயக்கா — செல்வநாயகம் ஒப்பந்தத்தின் அடிப் படையில் தீர்வுத் திட்டம் எதனையும் கொண்டு வந்தால் அது எமது மக்களுக்கு திருப்திதரும் திட்டமாக இருக்காது."

—இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம்.

வடக்கு — கிழக்கு இணைந்ததாக — தன்னாட்சி உடைய — ஒரு சமஷ்டி கட்டமைப்பை— சுயாட்சி முறையை அரசு முன்வைத்தால் அதை ஆக்கபூர்வமான வழியில் நாம் பரிசீலிப்போம் என்றும் அவர் அறிவித்தார்.

வல்வெட்டித்துறை திருவில் சதுக்கத்தில் நேற்று மாலை நடைபெற்ற கேணல் கிட்டுவின் இரண்டாவது ஆண்டு நினைவு விழாவில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

திரு. அன்ரன் பாலசிங்கம் தமது உரையில் கூறியதாவது:-

இதுவரை அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் மூன்று கட்டப் பேச்சுக்கள் நடைபெற்றிருக்கின்றன.

இந்தப்பேச்சுக்கள் என்ன திசையில் செல்கின்றன? இப்பேச்சுக்களால் எமது மக்களின் பிரச்சினைகள் தீருமா? அரசு என்ன செய்யப்போகின்றது? இந்தப் பேச்சுக்கள் வெற்றியளிக்குமா? தமிழ் மக்களுக்கு நிரந்தரமான நிம்மதியான சமாதான சூழ்நிலை ஏற்படுமா? இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு கிட்டுமா? — என்று எமது மக்கள் கேட்டுக் கொண்டிருக்கி

(7 ஆம் பக்கம் பார்க்க]

## அரசியல் பேச்சுக்கு முன்னர் மற்றொரு சுற்றுப் பேச்சு!

### 'தினமின' பத்திரிகை தகவல்

கொழும்பு, ஜன. 17

அரசியல் தீர்வுக்கான பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு முன்னர் அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மற்றும் ஒரு சுற்றுப் பேச்சு நடைபெறும் என்று நேற்றைய 'தினமின' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கும் அரசதரப்பினருக்கும் இடையே ஏற்கெனவே மூன்று கட்டப்பேச்சுக்கள் நடந்து முடிந்திருப்பது தெரிந்ததே.

நான்காவது கட்டப் பேச்சுக்குப் பின்னரே அரசியல் தீர்வுக்கான பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட உள்ளதாக அரசாங்க வட்டாரங்களை மேற்கோள்காட்டி அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

## சமஷ்டித் தீர்வுக்கு றொனியும் ஆதரவு

சமஷ்டி மூலம்தீர்வு காணப்படுவதைத் தாமும் வரவேற்பதாக முன்னாள் நிதியமைச்சரும் எம். பியுமான றொனி டி மெல் கூறியிருக்கிறார்.

கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

''வடக்கு – கிழக்குப் பிரச்சினையால் நாள் ஒன்றுக்கு ஏழரைக்கோடி ரூபாவைநாடு இழந்து வருகிறது. இந்நிலையில் இனப்பிரச்சினைக்கு சமஷ்டி முறையிலான தீர்வை நீங்கள் வரவேற்பீர்களா?''— என்று அவரிடம் வினாவப்பட்டது.

''நாட்டைப் பிரிப்பதற்கான படிக்கல்லாக சமஷ்டி முறை அமையாதவரை, அம்முறையின்கீழ் நான் வாழமுடியும்.

இளைஞனாக இருந்த போதே பண்டாரநாயக்கா— செல்வநாயகம் ஒப்பந்தத்தை ஆதரித்தவன் நான்.

''தாராள மனதுடனும் நல்லெண்ணத்துடனும் செயற்பட்டு, இந்த நாட்டில் உள்ள அனைத்து சிறுபான்மையினருக்கும் உரியதை நாம் வழங்க வேண்டும். இல்லையேல் என்றோ ஒருநாள் — வேறு வழியின்றி—பிரிவினையே தீர்வாகி விடும்'' — என்று பதிலளித்தார் றொனி. (உ)

## நயினாதீவில் காணப்பட்ட படகு ஏற்படுத்திய பரபரப்பு

கொழும்பு, ஜன. 17

விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் போர் இடைநிறுத்த உடன்பாடு வந்த பின்னர், கடந்த வார முற்பகுதியில் நயினாதீவில் கண்டுபிடிக்கப்பட்ட — வெறும் படகு ஒன்று— அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியதாகத் தெரியவருகின்றது.

படகு கண்டுபிடிக்கப்பட்டதைத் அடுத்து அனைத்துத் தீவுகளிலும் கடற்படையினர் பெருத்த எடுப்பில் தேடுதல் வேட்டை ஒன்றை நடத்தினர் என்றும்—

ஆனால் புதிதாக எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை என்றும்—

கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. (உ)

### பொருளாதாரத் தடை நீக்கம்

## இன்று அல்லது நாளை வர்த்தமானி அறிவித்தல்?

கொழும்பு, ஜன. 17

வடபகுதிக்கு எடுத்துச் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்ட பொருள்களில் ஏழு பொருள்கள் மீதான தடை மட்டும் தொடர்ந்து அமுலில் இருக்கும் என்றும்—

ஏனைய பொருள்கள் மீதான தடையை நீக்குவதற்கு அரசாங்கம் முடிவு செய்துள்ளதாகவும்— நேற்றைய 'ஐலண்ட்' நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

சைக்கிள் போல் பியறிங், மோட்டார் சைக்கிள் உதிரிப் பாகங்கள், டீசல் பெற்றோல், காரீயம், இரசாயனப்பொருள்கள் ஆகியவையே இந்தப் பொருள்கள் ஆகும்.

இதற்கிடையில் வட பகுதி மீதான பொருளாதாரத் தடையை முற்றாக நீக்க ஒரிரு தினங்களில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று வீரகேசரி செய்தி வெளியிட்டுள்ளது.

இது சம்பந்தமான வர்த்தமானி அறிவித்தல் இன்று செவ்வாய் அல்லது நாளை புதன்கிழமை வெளிவரும் என்று இராணுவப் பேச்சாளர் தெரிவித்ததாக அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[இ]

## கேணல் கிட்டு நினைவு நாள் உணர்வுடன் அனுஷ்டிப்பு!

யாழ்ப்பாணம், ஜன. 17

இந்திய அரசின் சதியினால் வங்கக்கடலில் காவியமான விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கேணல் கிட்டு மற்றும் ஏனைய மாவீரர்களின் நினைவு தினம் நேற்று மிகவும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

நேற்றுக் காலை இந்த மாவீரர்களின் உருவப்படங்களுக்கு சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

குடாநாட்டின் பல இடங்களிலும் கேணல் கிட்டுவினதும் ஏனைய மாவீரர்களினதும் உருவப்படங்கள் அலங்கரிக்கப்பட்ட பந்தல்களில் வைக்கப்பட்டிருந்தன.

பொதுமக்களும் போராளிகளும் உருவப்படங்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

பிரதான சந்திகளில் நினைவுப் பாடல்கள் ஒலித்தன.

வீதிகளிலும் சந்தைகள் மற்றும் பொது இடங்களிலும் சிவப்பு மஞ்சள் நிறக் கொடிகள் கட்டப்பட்டிருந்தன.

### நல்லூரில்

காலை 9 மணியளவில் நல்லூரில் உள்ள கேணல் கிட்டு நினைவு சிறுவர் பூங்காவில் அஞ்சலி நிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

தமிழீழ அரசியல்துறைத்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## பொருள்களை இறக்க மேலும் இரு பாஜ்கள் நேற்று வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம், ஜன. 17

பருத்தித்துறை துறைமுகத்தில் பொருள்களை இறக்கும் வேலைகளுக்கு பயன்படுத்தவென மேலும் இரண்டு பாஜ்கள் நேற்று வந்து சேர்ந்தன.

திருகோணமலை புல்மோட்டை பகுதியிலுள்ள காரீய உற்பத்தி தொழிற்சாலை ஒன்றின் தேவைகளுக்கு பயன்படுத்தப்பட்டு வந்த இந்த இரண்டு பாஜ்களும் 'நில்கிரி' என்ற கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு நேற்று எடுத்து வரப்பட்டிருந்தன.

ஏற்கனவே பருத்தித்துறை துறைமுகத்தில் பொருள்களை இறக்கி ஏற்றும் சேவையில் ஈடுபட்டுள்ள 5 பாஜ்களுடன் இந்த இரண்டு பாஜ்களும் பயன்படுத்தப்படவிருக்கின்றன. இதன் மூலம் பொருள்கள் இறக்கும் பணி துரிதப்படுத்தப்படவிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

### பலத்த பாதுகாப்பின் மத்தியில்

## பப்புவாநியுகினிக்கு பாப்பரசர் நேற்று விஜயம்!

போட் மொறஸ்பி, ஜன. 17

பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் தமது மணிலா விஜயத்தை முடித்துக் கொண்டு நேற்று பப்புவா நியுகினியின் தலைநகர் போட் மொறஸ்பியைச் சென்றடைந்தார்.

போட் மொறஸ்பி விமான நிலையத்தில் அவருக்கு கோலாகல வரவேற்பு அளிக்கப்பட்டது. பெரும் எண்ணிக்கையான மக்கள் அதில் கலந்து கொண்டனர்.

பாப்பரசரை தரிசிப்பதற்காக மிகத் தூர இடங்களில் இருந்து மக்கள் யானைகளில் அங்கு வந்திருந்தனர்.

இதற்கிடையில் —

பாப்பரசரை கொல்வதற்காக ஈரானைச் சேர்ந்த இரு இஸ்லாமிய தீவிரவாதிகள் பப்புவா நியுகினிக்குள் ஊடுருவியிருப்பதாக தகவல் கிடைத்ததை அடுத்து போட்மொறஸ்பியில் பாதுகாப்பு என்றுமில்லாதவாறு பலப்படுத்தப்பட்டிருக்கிறது.

இதேவேளை—

கடந்த ஒரு வருடகாலத்தின் பின் பப்புவாநியுகினியில் நேற்று முன் தினம் இரவு மழை பெய்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது. [ஐ]

## காணாமற் போனோரின் தகவல் தரக் கோரிக்கை

கொழும்பு, ஜ17

வடக்கு, கிழக்குப்பகுதிகளில் காணாமற் போன மற்றும் கடத்திச் செல்லப்பட்ட நபர்கள் குறித்து அடுத்த மாதம் 14 ஆம் திகதிக்கு முன்னர் தகவல்கள் பெற்றுக்கொள்ளப்படும் என்று இதற்கென நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

காணாமல் போனவர்கள், கடத்தப்பட்டவர்கள் சம்பந்தமாக விசாரணை நடத்தவென நியமிக்கப்பட்ட மூன்று ஜனாதிபதி ஆணைக்குழுக்களும் சம்பவங்கள் பற்றி தற்போது தகவல்களைச் சேகரித்து வருகின்றன.

இந்த ஆணைக்குழுக்கள் 1988 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதிக்குப் பின்னர் நடைபெற்ற சம்பவங்கள் பற்றி விசாரணை நடத்தும்.

வடக்கு கிழக்குப் பகுதிகளில் காணாமல் போனோர், கடத்தப்பட்டோர் பற்றிய விசாரணைகளை நடத்தவென நியமிக்கப்பட்ட ஆணைக்குழு அலுவலகம் கொழும்பு உயர் நீதிமன்றக் கட்டடத்தில் உள்ள நீதி அமைச்சில் செயற்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொழும்பில் கண்டனப் பேரணி

கொழும்பு, ஜன. 17

பொ. ஐ முன்னணி அரசு தனது முதலாவது வரவு செலவுத் திட்டத்தை உலக வங்கியின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு தயாரித்து வருவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து

[8 ஆம் பக்கம் பார்க்க]

## இரணைமடுப் பகுதியில் புலிகளின் விமானத்தளம்

### கொழும்புப் பத்திரிகை செய்தி

கொழும்பு, ஜன. 17

யுத்த இடைநிறுத்தம் வருவதற்கு முன்னர் விடுதலைப் புலிகளால் இரணமடுப் பகுதியில் அமைக்கப்பட்ட விமானத் தளம் ஒன்றை இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் கண்டுபிடித்ததாகவும் —

அதனை அழிக்கும்படி ஸ்ரீலங்கா விமானப்படை கேட்கப்பட்டதாகவும் —

ஆனால் அத்தகைய நடவடிக்கையை மேற்கொள்வதற்கான குண்டுகள் இல்லை என விமானப்படை தெரிவித்துவிட்டதாகவும் —

கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

காட்டை வெட்டித் துப்புரவு செய்து 800 மீற்றர் தூரத்துக்கு ஓடுபாதை அமைக்கப்பட்ட நிலையில் காணப்பட்ட இந்த விமானத் தளம் சிறிய பாரம் குறைந்த விமானங்களுக்காக அமைக்கப்பட்டிருக்கலாம்.

இத்தகைய விமானங்கள் விடுதலைப்புலிகள் வசம் உள்ளன என புலனாய்வுப் பிரிவு நீண்டகாலமாகக் கூறி வந்தாலும் அவற்றில் எதுவும் இதுவரை வானில் காணப்பட்டதாக இல்லை.

இத்தகைய புலனாய்வு அறிக்கைகளின் அடிப்படை

(2 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ. தே. க. ஆட்சி முறைகேடுகளை விசாரிக்க விசேட ஆணைக்குழு

கொழும்பு, ஜன. 17

ஐக்கிய தேசியக் கட்சியின் 17 வருட கால ஆட்சிக் காலத்தில் இடம்பெற்றதாகக் கருதப்படும்அதிகார துஷ்பிரயோகம், அடிப்படை உரிமைகள் மற்றும் மனித உரிமைகள் மீறப்பட்டமை, அரசமைப்புக்கு முரணாகச் செயற்பட்டமை ஆகியவை குறித்து விசாரிப்பதற்கு விசேட ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை நியமிக்க பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு முடிவு செய்திருக்கிறது.

விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமிப்பதற்கான ஏற்பாடுகளை அரச உயர்பீடமும் அதிகாரிகளும் அவசரமாக மேற்கொண்டு வருவதாகத் தெரியவருகின்றது என கொழும்பு ஆங்கில வாரஇதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஆணைக்குழு மிக விரைவில் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் தனது விசாரணைகளை ஆரம்பிக்கும் என சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

இத்தகைய ஒரு விசாரணைக் குழுவின் சிபார்சின் அடிப்படையிலேயே திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் குடியுரிமை ஏழு ஆண்டு காலத்துக்கு முன்னர் அரசினால் பறிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## ஐ.தே.க. எம்.பிக்கள் 20 பேர் பொ.ஐ.முவில் சேர திட்டம்?

கொழும்பு, ஜன. 17

ஐ.தே.கவில் அதிருப்தியுற்றுள்ள — கணிசமான எண்ணிக்கையுடைய — எம்.பிக்கள் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசின் பக்கம் சாய்வதற்குத் திட்டமிட்டு வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பொதுத் தேர்தலின் பின்னர் ... கையோடு, இடம்பெற்ற எதிர்க்கட்சித் தலைவர் தெரிவின் போது — ரணில் விக்கிரமசிங்காவுக்கு எதிராகவும் — காமினி திஸநாயக்காவுக்கு ஆதரவாகவும் — தீவிரமாகச் செயற்பட்ட சிலரும் —

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து பிரிந்து ஐ.தே.கவில் சேர்ந்த அனுரா பண்டாரநாயக்கா ஆதரவாளர்களுமே —

இப்போது ஐ.தே.கவை விட்டு பொ.ஐ.மு. பக்கம் சேரவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜனவரி 6 ஆம் திகதியன்று நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா கொள்கை விளக்கப் பிரகடன உரையை நிகழ்த்திய பின்னர், நாடாளுமன்றக் கட்டடத்தில் உள்ள அமைச்சர் ஒருவரின் அலுவலகத்தில் இது தொடர்பான ஆரம்பப் பேச்சுக்கள் இடம்பெற்றன.

ஐ.தே கவில் உள்ள அதிருப்தியாளர் குழு எம்.பி ஒருவர் சம்பந்தப்பட்ட அமைச்

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணுவில்
கந்தசுவாமி கோயில்
# தைப்பூச
# திருமஞ்சத் திருவிழா

இன்று (17 - 01 - 1995) காலை 9-00 மணி முதல் ஆறுமுகப் பெருமானுக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று, மாலை 6-00 மணிக்கு வசந்த மண்டபப் பூசையுடன் எம் பெருமான் திருமஞ்சத்தில் வீதியுலா வரும் அருட்காட்சி இடம்பெறவுள்ளது. அடியவர்கள் இவ்விழாவில் கலந்து அருள் பெற்று ஏகுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

இங்ஙனம்:
உபயகாரர்.

[34740]

புன்னாலைக்கட்டுவன் தாளையடி
நாகதம்பிரான் ஆலய
கட்டட நிதிக்கான
## அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு முடிவு

1ஆம் பரிசு: இல. 3253
2ஆம் பரிசு: இல. 1483
3 ஆம் பரிசு: இல. 736

10 ஆறுதல் பரிசு இலக்கங்கள்:

| | | | | |
|---|---|---|---|---|
| 3901 | 3383 | 2498 | 628 | 4228 |
| 4388 | 2924 | 1040 | 3143 | 3296 |

மு. குறிப்பு: 31-01-1995 இற்கு முன்னர் பரிசுகளைப் பெற்றுக் கொள்ளவும்.

ஆலய அபிவிருத்திக் குழு

[7867]

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 01 — 03 — 1920
பிரிவு: 28 — 01 — 1994

### திருமதி சின்னத்தம்பி பாக்கியம்

திதி: 17-01-1995

''தாயிற்சிறந்த கோயிலும் இல்லை
தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை''


என்ற சான்றோர் வாக்குக்கு அமைய எமக்குக் கோயிலாய், தெய்வமாய் எம்மை வாழவைத்த தெய்வமே உமது பிரிவு எம்மால் தாங்கமுடியாது. உமது ஆத்ம சாந்திக்கு இறைவனை மன்றாடுகின்றோம்.

திருமதி அ. யோகேஸ்வரி
(மகள்)

44/2, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(34742)

## ஓராண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்: 12 — 05 — 1931
ஆண்டவன் அடியில்: 27 — 01 — 1994

அமரர்
### இராசதுரை சோமசுந்தரம்
( விஜயன் )

அன்புத் தெய்வமே!
இன்சொலால் எமையழைத்துப் பாசமழை பொழிந்து
வன் செயல்கள் பலவந்தும் அதில் விலகி வாழ்ந்து
கொடுமை மிகு கூற்றுவனே சதிசெய்து கொன்றான்
கோலமிகும் உன்வதனம் காண்பதெப்போ பப்பா
வேதனையாற் துடித்தலறி வெம்புகின்றோம்
விழ்ந்த உடல் காணாமல் ஏங்குகின்றோம்
பொல்லாத பூமியிலே துன்புறவோ எம்மைவிட்டு
சொல்லாது இறைவனடி துரிதமுடன் சேர்ந்தனையோ?

இன்று 17 - 01 - 1995 எமது இல்லத்தில் நடைபெறும் ஓராண்டு நினைவஞ்சலி நிகழ்விலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அழைக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்

சத்தியநாதன் வீதி,
கம்பர்மலை,
வல்வெட்டித்துறை.

(34741)

யா/ வண். வட கிழக்கு கொண்டலடி
விநாயகர் ஆலய வருடாந்த
## அலங்கார உற்சவ பூர்த்தியும், கும்பாபிஷேக தின, தைப் பூச விழாவும், வைரவர் சாந்தி விழாவும்

காலம்: இன்று [17-01-95]
காலை 8மணிக்கு
[1008] நவோத்தர சகஸ்ர சங்காபிஷேகம்
பிரதம குருவாக
சிவஸ்ரீ நா. பாலசுப்பிரமணிய குருக்கள்

நண்பகல் 12 மணிக்கு ஆசியுரை:
வழங்குபவர்கள்
சிவ பிரம்மஸ்ரீ ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியர் அவர்கள்
(இந்து மத குரு பீடாதிபதி)
சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள்
(நல்லை ஆதீனம்)
க. தவராசா அவர்கள்
(அதிபர்-யாழ். இந்து ஆரம்ப பாடசாலை)

### வைரவர் சாந்தி விழா

நாளை [18-01-95] புதன்
மாலை 4 மணிக்கு விஷேட அபிஷேகம்

விஷேட நிகழ்ச்சிகள்

மாலை 6 மணி:
திரு. இ. குமானந்தன் குழுவினர்
(ஆலய மங்கள வாத்தியக் குழுவினர்)

இரவு 8 மணிக்கு: நாதஸ்வர கச்சேரி
N.K. பத்மநாதன் — P. முருகதாஸ்
S. சிதம்பரநாதன் — R. முருகானந்தம்
V.K. கானமூர்த்தி — K. கணேசன்
V.K. பஞ்சமூர்த்தி — S. சுப்பிரமணியம்

இரவு 11-30 மணி: இன்னிசைக் கச்சேரி
திரு. வர்ண ராமேஸ்வரன்

அதிகாலை 1-30 மணி: வில்லிசை
"கதிரவனை தடுத்த காரிகை"
நவரச கலைத் தென்றல், கலைமாமணி
சிவஞானபானு சாம் சோமாஸ்கந்த சர்மா
(ஸ்ரீ தேவி வில்லிசைக் குழு, நல்லூர்)

[34743]
நிர்வாக சபையினர்

## கோலப் பயிற்சி

நல்லை ஆதீனத்தில் மீண்டும் கோலப் பயிற்சி வகுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பயிற்சி பெற விரும்புவோர் எதிர்வரும் சனிக்கிழமை [21-01-95] பி.ப. 3.00 மணிக்கு வரவும். பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

ஆதீனகர்த்தா

[34745]

## கண்ணீர் அஞ்சலி

### கந்தையா மயில்வாகனம் B.sc.

[இளைப்பாறிய ஆசிரியர் வேலணை /சேர். வை. து. ம. ம. வித், கொக்குவில் இந்துக்கல்லூரி, யாழ்/ கனகரத்தினம் மத்.ம.வித், புங்குடுதீவு ம.வி.]

புங்குடுதீவு குறிச்சிக்காட்டைப் பிறப்பிடமாகவும், புளியங்கூடலை வசிப்பிடமாகவும் கொண்ட அன்னார் 11-01-1995 இல் கனடாவில் காலமானார்.

இவர் எமது கிராம வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைந்த மகாமாரி சனசமூக நிலையம், புளியங்கூடல் கிராம முன்னேற்றச் சங்கம் ஆகியவற்றின் தலைவராக இருந்து அரும்பணியாற்றி மக்கள் மனங்களை கவர்ந்து எமது கிராம வளர்ச்சிக்கு வித்திட்டவர்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது நிலையங்களின் சார்பில் இக் கண்ணீர் அஞ்சலியை சமர்ப்பிக்கின்றோம்.

புளியங்கூடல் மகாமாரி சனசமூக நிலையம்,
புளியங்கூடல் கிராம அபிவிருத்திச் சங்கம்.

[34747]

## 31-ம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 14 — 07 — 1966
உதிர்வு: 19 — 12 — 1994

### அமரர் வயிரமுத்து வாசுதேவன்

வல்ல மீனாட்சியின் வடிவமான தேவனவன்
நீர்வையிலே நடமாடினான் மக்கள் இன்னல் தீர்க்க
எல்லையில்லா கலையுணர்வை சுமந்து நின்றதேனோ
இளம்பயிர் இடையினிலே துடித்துறங்கியது ஏனோ.

இன்று [17-01 1995] நிகழவிருக்கும் அமரரின் ஆத்மசாந்தி வைபவத்தில் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

தகவல்:
அமரரின் குடும்பத்தினர்

நீர்வேலி மேற்கு.

## தபால்கள் இன்று விநியோகம்

யாழ்ப்பாணம், ஜன. 17

சென்ற வெள்ளிக்கிழமை பருத்தித்துறை வந்தடைந்த 'கோமாரி' கப்பலில் எடுத்துவரப்பட்ட 288 தபால் பொதிகளும் இன்றும், நாளையும் உரியவர்களுக்கு விநியோகிக்கப்படும்.

சென்ற சனிக்கிழமை இரவு இத் தபால் பொதிகள் யாழ். பிரதம தபாலகத்துக்கு எடுத்து வரப்பட்டிருந்தன. இவற்றில் 110 வெளிநாட்டுத் தபால் பொதிகளும் அடங்கும்.

நேற்று திங்கட்கிழமை விடுமுறை நாளாக இருந்த போதிலும் தபால் பொதிகளை தரம் பிரிக்கும் வேலைகள் ஆரம்பமாகியிருந்தன.

(இ-4)

## வீரவணக்கக் கூட்டம்

யாழ்ப்பாணம். ஜன. 17

ஜனவரி மாதத்தில் வீரச்சாவடைந்த மாவீரர்களின் வீரவணக்கக்கூட்டம் நாளை புதன்கிழமை இரவு 7.30 மணிக்கு புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

விடுதலைப்புலிகள் இயக்கப் பிரமுகர்களின் கருத்துரைகளும் கலை நிகழ்ச்சிகளும் கூட்டத்தில் இடம்பெறும்.

(க)

### கேணல்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

துணைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன் அங்கு தமிழீழ தேசியக் கொடியை ஏற்றிவைத்தார்.

பிரதான ஈகைச்சுடரை மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகம் ஏற்றினார்.

பூங்காவில் உள்ள கேணல் கிட்டுவின் உருவச் சிலைக்கு யாழ். மாவட்ட சிறப்புத் தளபதி திரு. செல்வராஜா மலர் மாலை அணிவித்தார்.

உருவப்படங்களுக்கு பெற்றோரும், போராளிகளும் மலர் மாலைகளை அணிவித்தனர்.

நூலகம் ஒன்று நேற்று அங்கு திறந்து வைக்கப்பட்டது.

வன்னி, முல்லை, மன்னார் மாவட்டங்களிலும் அஞ்சலி நிகழ்வுகள் இடம் பெற்றன.

கேணல் கிட்டுவினதும் ஏனைய மாவீரர்களினதும் உருவப்படங்களைத் தாங்கிய ஊர்திப்பவனிகள் பல அங்கு இடம்பெற்றன.

நினைவு தினத்தை ஒட்டிய மாபெரும் பேரணியும் பொதுக் கூட்டமும் நேற்று மாலை வடமராட்சியில் நடைபெற்றன.

ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்ட பேரணி உடுப்பிட்டிச் சந்தியில் இருந்து ஆரம்பமானது.

கடற்புலிகள், காவல்துறை மாணவர் அமைப்பு ஆகியவற்றின் கண்கவர் அணிவகுப்பும் பேரணியில் இடம்பெற்றது. பேரணி நெல்லியடிச் சதுக்கத்தை சென்றடைந்ததும் அங்கு நினைவுக் கூட்டம் நடைபெற்றது.

கடற்புலிகளின் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. செ. இளையவன் கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சி. இளம்பரிதி, யாழ். மாவட்டமகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி. தணிகைச்செல்வி தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் திரு. பா. நடேசன் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி திரு. சூசை, ஆகியோர் நினைவுரை ஆற்றினர்

கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

(ஐ - 3, 4, 9, 17, 13, 15, 155, 173)

### இரணமடுப்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யிலேயே 1992இல் சீனாவிலிருந்து ஏழு சுப்பசொனிக் விமானங்களை விமானப் படை கொள்வனவு செய்தது.

இதே சமயம் —

விமானப்படைக்கு கடும் மிரட்டலைத் தரக்கூடிய — நிலத்திலிருந்து வானத்துக்குச் செலுத்தும் — ஏவுகணைகளை புலிகள் வாங்கியுள்ளனர் என புலனாய்வுத் துறையினர் கடந்த பல வருடங்களாக மீண்டும் மீண்டும் எச்சரிக்கை செய்து வருகின்றனர்.

ஆனால் —

இத்தகைய ஏவுகணைகளை புலிகள் இதுவரை பயன்படுத்தவில்லை.

— இவ்வாறு அந்தப் பத்திரிகைச் செய்தி தெரிவித்தது.

(உ)

## சிறுவர் பூங்கா நிறைவு விழா

யாழ்ப்பாணம், ஜன. 17

யாழ்ப்பாணம் பொம்மைவெளி சிறுவர் போசாக்கு பராமரிப்பு பூங்காவின் 2ஆம் ஆண்டு நிறைவு விழா நாளை 18 ஆம் திகதி புதன்கிழமை மாலை 3மணி முதல் நடைபெறும். விழாவில் 2ஆம் ஆண்டு நிறைவு மலர் வெளியீடு, கலைநிகழ்ச்சிகள் ஆகியனவும் இடம்பெறும். [க]

### கொழும்பில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் இன்று கண்டனப் பேரணி ஒன்று நடத்தப்படவுள்ளது.

சுயாதீன அமைப்புக்கள் சில ஒன்றிணைந்து இந்த எதிர்ப்புப் பேரணியை நடத்தவுள்ளதாக பி. பி. ஸி சிங்கள சேவையில் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-6)

## பட்டமளிப்பு

கொக்குவில் கைலை சர்வோதய ஆதீனம் திரு. வை. சுந்தரமூர்த்திக்கு சிவபாத சுந்தரனார் சுவாமிகள் என்ற பட்டமளிக்கும் விழா இன்று 17 ஆம் திகதி காலை 8 மணி முதல் கந்தர்மடம் சிவகுரு நாதபீடம் மகாதேவ ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும்.

காலை 9-30 மணி தொடக்கம் கொக்குவில் கோணேஸ்வரன் வீதியில் அமைந்துள்ள கைலை சர்வோதய ஆதீன ஆச்சிரமம் திறந்து வைக்கப்படும். (க)

## வானொலியில் சந்திரிகாவின் பொங்கல் உரை

தைப்பொங்கலை ஒட்டி ஜனாதிபதி சந்திரிகா தமிழில் ஆற்றிய வாழ்த்துரையை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஒலிபரப்பியது.

சிறுவர் போசாக்கு பராமரிப்பு பூங்கா
பொம்மைவெளி — யாழ்ப்பாணம்
### 2 ஆம் ஆண்டு நிறைவு விழா
18-01-1995 மாலை 3.00 மணி

## நிகழ்ச்சி நிரல்

பாண்ட் வாத்திய இசை:-
பூங்கா சிறுவர்கள்

தேசிய கொடியேற்றல்:-
திரு. ந. வெள்ளை
(வலிகாமம் கோட்ட பொறுப்பாளர்)

மங்கள விளக்கேற்றல்:-
செல்வி ஜனனி
(பொறுப்பாளர், செஞ்சோலை)
திரு. றமேஸ் அப்பா
(பொறுப்பாளர், காந்தரூபன் அறிவுச்சோலை)

தமிழ்த்தாய் வாழ்த்து:-
பூங்கா சிறுவர்கள்

வரவேற்பு நடனம்:-
பூங்கா சிறுவர்கள்

வரவேற்புரை:-
திருமதி சி. வசந்தமலர்
(ஆசிரியை)

தலைமையுரை:
திரு. எ. பிரான்சிஸ்
(பூங்கா நிர்வாகி)

சிறப்புரைகள்:-
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்
(திருஞானசம்பந்தர் ஆதீனம், நல்லூர்)
பேராசிரியர்
சி. யோ. இம்மனுவேல் அடிகளார்
(குரு முதல்வர் - ஆயர் இல்லம்)
திரு. சு. ப. தமிழ்ச்செல்வன்
(பொறுப்பாளர், அரசியற்துறை தமிழீழம்)
பேராசிரியர் ந. பாலகிருஷ்ணன்
(தலைவர், பொருளியல்துறை, யாழ். வளாகம்)
செல்வி தணிகைச்செல்வி
(பொறுப்பாளர் மகளிர் அமைப்பு, யாழ். மாவட்டம்)
திரு. சொலமன். சூ. சிறில்
(தலைவர், ப. நோ. கூ. சங்கம், யாழ்ப்பாணம்)
வைத்தியகலாநிதி மனோ
வைத்தியகலாநிதி
ரி. டபிள்யூ. ஜெயகுலராஜா
(முகாமைப்பணிப்பாளர், பரியோவான் கல்லூரி, யாழ்ப்பாணம்)
செல்வி ப. கோமதி
(ஆசிரியை - வாழ்க்கைத்திறன் கல்வி நிலையம்)
திரு. சி. இளம்பரிதி
(பொறுப்பாளர், அரசியற்துறை, யாழ்ப்பாண மாவட்டம்)

2 ஆம் ஆண்டு சிறப்புமலர் வெளியீடு
பிரதிவழங்குபவர்
சிறப்பு தளபதி திரு. வ. செல்வராசா
பெறுபவர்கள்
பொது நிறுவனங்களின் பிரதிநிதிகள்

நன்றியுரை:-
திரு. பொ. செந்தமிழன்
(பொறுப்பாளர், யாழ். வட்டம்)

கலை நிகழ்ச்சிகள்:-
பூங்கா சிறுவர்கள்
கலை பண்பாட்டுக் கழகம்

எமது அழைப்பை ஏற்று விழா நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும்படி அன்புடன் அழைக்கிறோம்.

சிறுவர் பாதுகாப்புத் திட்டம்
அரசியற்துறை,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
யாழ் மாவட்டம்,
தமிழீழம்.

விளம்பர அன்பளிப்பு:-
வணிகர் கழகம்
யாழ்ப்பாணம்.

(சி/185)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



கடந்த சனியன்று யாழ்ப்பாணத்தில் நடந்த மூன்றாம் கட்ட பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட அரச தரப்பு பிரதிநிதிகளும், விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளும் பேச்சுவார்த்தை மேசையில் நேர் எதிராக அமர்ந்திருக்கும் காட்சி. (ஐ)

# அரசமைப்பு மாற்றம் தொடர்பாக தெரிவுகுழுவுக்கு 500 ஆலோசனைகள்

## ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்புக்கே கூடுதல் ஆதரவு

கொழும்பு, ஜன. 17

தற்போதைய நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழித்து நாடாளுமன்றத்துக்கு அதிக அதிகாரம் கொண்ட அரசமைப்பு முறையை ஏற்படுத்துவது சம்பந்தமாக பொது மக்களிடமிருந்தும்—

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளிடமிருந்தும்— பெறப்பட்ட ஆலோசனைகள் இவ்வாரம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட உள்ளன.

இது சம்பந்தமான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு சுமார் 500க்கு அதிகமான ஆலோசனைகள் கிடைத்துள்ளன என்றும்—

இவற்றுள் பெரும்பாலானவை நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழித்து நாடாளுமன்றத்துக்குஅதிகஅதிகாரம் கொண்ட அரசமைப்பு முறையை ஏற்படுத்துவதற்கு ஆதரவானவை என்றும் கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

பொதுமக்களிடமிருந்தும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளிடம் இருந்தும் கிடைக்கபெற்ற ஆலோசனைகள் எதிர்வரும் வியாழக்கிழமை இது சம்பந்தமான விசேட நாடாளுமன்றத் தெரிவுக்குழு கூடும் போது பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

சகல அரசியல் கட்சிகளையும் சேர்ந்த பிரதிநிதிகள் இதில் அங்கம் வகிக்கின்றனர்

எதிர்வரும் ஜூலை மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் இலங்கைக்கு பொருத்தமான அரசமைப்பு ஒன்றை உருவாக்கும் நோக்கத்துடன் இந்த தெரிவுக்குழு அமைக்கப்பட்டது.

பொதுமக்களிடமிருந்தும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளிடமிருந்தும் கடந்த மாதம் 12 ஆம் திகதி வரை இந்த தெரிவுக்குழுவினால் ஆலோசனைகள் ஏற்கப்பட்டிருந்தன. (இ)

## ஜனாதிபதி ஆட்சி ஒழிப்பு தாமதம் அடையலாம்

### 'ராவய' தெரிவிக்கிறது

கொழும்பு, ஜன. 17

தற்போதைய சூழ்நிலையில், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை எதிர்வரும் ஜூலை 15 ஆம் திகதிக்கு முன் ஒழிக்கும் திட்டம் கால தாமதம் அடையலாம்.

'ராவய' சிங்கள வார இதழ் மேற்கண்டவாறு செய்தி வெளியிட்டுள்ளது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட தற்போதைய ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழித்து நாடாளுமன்றத்துக்கு அதிக அதிகாரம் கொண்ட அரசமைப்பை ஏற்படுத்துவதற்கு நாடாளுமன்றத்தில் தெளிவான பெரும்பான்மை தேவை,

ஆனால் அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகள், அரசுக்கு வெளியே இருந்து கொண்டு அரசுக்கு ஆதரவு வழங்கும் கட்சிகள் இது தொடர்பாக தெளிவற்ற போக்கைக் கடைப்பிடிப்பதால் அரசுக்கு சிக்கலான நிலை தோன்றி உள்ளது.

இதனால் ஜூலை மாதத்துக்குள் ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பது என்ற அரசாங்கத்தின் திட்டத்தை மீள் பரிசீலனை செய்ய வேண்டிய சூழ்நிலைக்கு அரசு தள்ளப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்கும் அதே நேரத்தில் விகிதாசார பிரதிநிதித்துவ முறையை நீக்கி மீண்டும் நாடாளுமன்றத் தேர்தலின் மூலம் நாடாளுமன்றத்தில் தனது வலுவை அதிகரிக்க வேண்டிய தேவை அரசுக்கு இருக்கிறது.

ஆயினும் தற்போது நாட்டில் அரசுக்கு எதிராக உருவாகி வரும் பொதுமக்கள் அபிப்பிராயத்தை கவனிக்கும் போது மீண்டும் நாடாளுமன்றத் தேர்தலை நடத்தி போதிய பெரும்பான்மையைக் கூட பெற முடியாத சூழ்நிலை உருவாகி வருவதாகத் தென்படுகிறது.

வாக்குறுதி அளித்தபடி எதிர்வரும் ஜூலை மாதத்திற்குள் ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்க முடியாத விடத்து இந்தத் திட்டத்தை முற்றிலுமாகக் கைவிட வேண்டிய சூழ்நிலை உருவாகக் கூடும் என அரசியல் அவதானிகள் கருதுகின்றனர் என்றும் 'ராவய' தெரிவிக்கிறது.

(இ-10)

# மண்எண்ணெய் கலன்களை பிடித்து கரையை நோக்கி நீந்தினோம்!

## விபத்தில் உயிர்தப்பிய மீனவர் பேட்டி

வல்வெட்டித்துறை, ஜன. 17

''எமது வள்ளத்துடன் ''ஹபரண'' கப்பல் மோதியதும் நாம் தூக்கி வீசப்பட்டோம். எமது வள்ளம் சிதறிப்போனது. சிதறிய வள்ளத்தில் இருந்த மண்எண்ணெய் கலன்களை மிதவையாகப் பயன்படுத்தி ஒருவாறு கரையை நோக்கி நீந்தினோம்''

— வல்வெட்டித்துறை தவிப்பனைக் குடியேற்றத்தைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் பாலேந்திரன் (வயது 17) முன்கண்டவாறு கூறினார்.

கடந்த சனி இரவு பருத்தித்துறை கடலில் 'ஹபரண' கப்பலுடன் மோதி விபத்துக்குள்ளான மீன்பிடி வள்ளத்தில் இருந்து உயிர்தப்பிய இவர் தனக்கு ஏற்பட்ட அனுபவம் குறித்து ''உதயன்'' செய்தியாளருக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது;

''கப்பல் வள்ளத்தின் திசையில் வேகமாக வந்தபோது நாம் கடலில் குதித்தோம். விமல்ராஜ் கப்பலுக்குக் கீழே குதித்து விட்டார்.

நாம் இருவரும் நீந்தி சிதறுண்ட வள்ளத்தின் ஒரு பகுதியை நெருங்கி அதிலிருந்த மண்ணெண்ணெய் கலன்களை எடுத்து மண்எண்ணெயைக் கடலினுள் ஊற்றிவிட்டு அவற்றை மிதவையாகப் பாவித்து கரையை நோக்கி நீந்தினோம்.

''ஹபரண'' கப்பலில் இருந்தவர்கள் எம்மை நோக்கி ''ரோர்ச்'' ஒளியைப் பாய்ச்சிய வண்ணம் கயிற்றில் கட்டப்பட்ட ரயர் ஒன்றை எம்மை நோக்கி வீசினர். நாங்கள் ரயறில் ஏறியதும் அவர்கள் எங்களைக் கப்பலுக்குள்ளே இழுத்தெடுத்தார்கள்; காயங்களுக்கு மருந்து போட்டார்கள். உணவும் தந்தார்கள். ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் எம்மை பருத்தித்துறை இறங்குதுறைக்குக் கொண்டு வந்து செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினரிடம் ஒப்படைத்தனர் என்றார்.

இந்த விபத்தின் போது வல்வெட்டித்துறை திருவிலைச் சேர்ந்த வைத்திலிங்கம் நிமல்ராஜ் [வயது 24] என்பவர் கடலில் மூழ்கிப் பலியானார்.

இவரது சடலத்தை தேடிக் கண்டுபிடிப்பதில் மீனவர்கள் நேற்று ஈடுபட்டிருந்தனர்.

## ஐ.தே. க. புதிய எம். பிக்கள் அடுத்த மாதம்

கொழும்பு, ஜன. 17

கிராண்ட்பாஸ் குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் எம். பிக்களுக்குப் பதிலாக புதியவர்கள் அடுத்த மாதம் நியமிக்கப்படுவார்கள் என்று அக்கட்சியின் செயலாளர் காமினி அத்துக்கோறளை தெரிவித்தார். (உ)

## தொண்டர் ஆசிரியர் நியமனம்இல்லை

கொழும்பு, ஜன.17

பயிலுநர் தொண்டர் ஆசிரியர் நியமனங்கள் இனி செய்யப்பட மாட்டாது என்று கல்வி உயர்கல்வி அமைச்சர் ரிச்சார்ட் பத்திரான தெரிவித்துள்ளார். (இ)

## 4 மணி நேரம் கழிந்தும் ஜனாதிபதி வரவில்லை

### சந்திப்பு ஒத்திவைப்பு

கொழும்பு, ஜன. 17

தனது அமைச்சரவை சகாக்களினதும் அவர்களது அமைச்சுக்களினதும்—இதுவரை காலப்பணியை— மதிப்பீடு செய்து வரும் ஜனாதிபதி சந்திரிகா சம்பந்தப்பட்ட ஒவ்வொரு அமைச்சுக்களின் அதிகாரிகளையும் அழைத்து அதுபற்றி ஆராய்ந்து வருகிறார்.

கடந்த வாரம் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் நடவடிக்கைகளை ஆராயும் முறைவந்தது.

10-30 மணிக்கு நேரம் குறிக்கப்பட்டது. அதிகாரிகளும் நேரத்துடன் வந்துசேர்ந்தனர். ஆனால் நான்கு மணி நேரம் கழிந்தும் ஜனாதிபதி வந்து சேராததால் அந்தக் கூட்டம் நடைபெறவில்லை.

பிறிதொரு தினத்தில் அக்கூட்டத்தை நடத்த தற்போது அதிகாரிகள் முயன்று வருகின்றனர். [உ]



கிழக்கு மாகாணத்துக்கான போர் இடைநிறுத்த கண்காணிப்புக் குழுவினர் கடந்த வெள்ளியன்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை அலரி மாளிகையில் சந்தித்தனர். கண்காணிப்புக் குழுக்களுக்குத் தலைமை வகிக்கும் நோர்வேயைச் சேர்ந்த ஜோஷன் கப்ரியேல்சன் மற்றும் அவுடன் ஹொல்ம் மற்றும் கண்காணிப்புக் குழு உறுப்பினர்களில் ஒருவரான ஓய்வுபெற்ற நீதிபதி ஜே. ஆர். மொறிஸ் ஆகியோர் ஜனாதிபதியுடன் காணப்படுகின்றனர்.

### பத்திரிகைக்கு எதிராக

## ரூ. 50 லட்சம் நஷ்ட ஈடு கோர அனுரா நடவடிக்கை

''உபாலி நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட்'' நிறுவன வெளியீட்டில் தம்மைப்பற்றி வெளியான கட்டுரை ஒன்று தொடர்பாக 50 லட்சம் ரூபா நஷ்ட ஈடு கோரி வழக்கு தாக்கல் செய்ய அனுரா பண்டாரநாயக்கா முடிவு செய்திருக்கிறார்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் தலைவரும் தமது தாய் மாமனாருமான சிவலி ரத்வத்தைக்கு சட்டத்தரணிகள் மூலம் ஆட்சேபக் கடிதம் அனுப்பவும் அவர் முடிவு செய்திருக்கிறார்.

தற்போது ''ஒக்லண்ட் ஹவுஸில்'' தனது தாயாரான சிறிமாவோ பண்டாரநாயக்காவுடன் தங்கியிருக்கும் அனுரா, அங்கிருந்தவாறே இந்த விடயத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கும் ஏற்பாடுகளைக் கவனித்து வருகிறார். (உ)

### வங்கக் கடலில் தாழமுக்கம்

மன்னார் வளைகுடாவில் இருந்து தென் மேற்கே வங்கக் கடலில் தமிழ்நாட்டின் கரையோரப் பகுதியில் தாழமுக்கம் ஒன்று ஏற்பட்டுள்ளது.

இதனால் தமிழ் நாட்டின் சில மாவட்டங்களில் சிறிய அளவில் மழை பெய்து வருகிறது.

இந்த தாழமுக்கத்தினால் புயல் அபாயம் எதுவும் ஏற்பட மாட்டாது என்று தமிழ் நாடு அரசு அறிவித்துள்ளது.



மூன்றாம் கட்ட பேச்சுவார்த்தைக்காக கடந்த சனியன்று யாழ். வந்த அரச தரப்புக் குழுவில் இடம் பெற்ற பிரிகேடியர் சிறி பீரிஸ், சென். ஜோண்ஸ் மைதானத்தில் விடுதலைப் புலிகள் தரப்புக் குழுவின் தலைவரான அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வனுடன் உரையாடுவதை படத்தில் காணலாம்.

### மகர சங்கராந்தியை முன்னிட்டு

## புனித கங்கை நதியில் 4 லட்சம் பேர் நீராடினர்

### படகு ஒன்றும் கவிழ்ந்தது

புதுடில்லி. ஜன. 17

மகர சங்கராந்தியை முன்னிட்டு அலகாபாத்தில் கங்கை, யமுனா, சரஸ்வதி ஆகிய மூன்று புனித நதிகளும் சந்திக்கும் புண்ணிய ஜல சந்தியில் சுமார் 4 லட்சம் இந்துக்கள் நீராடினர்.

புனித நீராடச் சென்றவர்களின் படகு ஒன்று கவிழ்ந்த போது அதில் பயணம் செய்தவர்களில் 54 பேர் வரை காப்பாற்றப்பட்டனர். படகில் பயணம் செய்த சுமார் 100 பேரில் ஏனையோரின் கதி பற்றி அறிவிக்கப்படவில்லை.

சூரிய பகவான் மகர ராசியில் பிரவேசிக்கும் நேரமான சனிக்கிழமை மாலையில் இருந்து ஞாயிறு பிற்பகல் வரை லட்சக் கணக்கான இந்துக்கள் புனித கங்கை நதியில் நீராடினர் என்று தெரிவிக்கப்பட்டது. [இ]

### பொத்துவில் ஹோட்டலுக்கு இறக்குமதியான

## ரூ .25 லட்சம் ராணுவ உபகரணம் குறித்து விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, ஜன. 17

பொத்துவில பகுதியில் அமைக்கப்பட்டு வரும் உல்லாசப் பயணிகள் ஹோட்டல் ஒன்றுக்காக ஹொங்கொங்கிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட வர்த்தகப் பொருள்களுக்கு நடுவே சுமார் 25 லட்சம் ரூபா பெறுமதியான—சட்டவிரோத— இராணுவ உபகரணங்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்தது குறித்து குற்றப் புலனாய்வுப் பிரிவினரும் சுங்கப் பகுதியினரும் விசாரணை நடத்தி வருவதாக ரி'த சண்டே லீடர்'' பத்திருகை தகவல் வெளியிட்டிக்கிறது.

கலஇரண்டு பாரிய கொள்ளனர்களில் (''கொன் ரெயினர்,கள்'') இராணுவ சீருடைபைனாகுலர்கள், ஸ்ரெச்சர்கள், பாதுகாப்பு சீருடைத் துணிகள், பிரேதங்களைக் கொண்டு செல்வதற்குப் பயன்படுத்தப்படும் கருவிகள் உட்பட பல பொருள்கள் கொண்டுவரப்பட்டதாகத் தெரியவருகிறது

ஹொங்கொங்கில் மூடப்படும் இராணுவத்தளம் ஒன்றில் ஏலத்தில் எடுக்கப்பட்ட பொருள்களே அனுமதியின்றி நாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பொருள்களை சுங்கப் பகுதியிலிருந்து விடுவித்து எடுத்துச் செல்வதற்கு முயற்சித்த பிரிட்டிஷ்காரர் ஒருவரும் கொழும்பில் உள்ள பிரபல வர்த்தகர் ஒருவரும் இது தொடர்பாகவிசாரணை செய்யப்பட்டு வருகின்றனர்.

கொண்டு வரப்பட்ட இராணுவ உபகரணங்களின் பெறுமதி இன்னும் மதிப்பீடு செய்யப்பட்டு முடியவில்லை என சுங்க அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

இந்த விடயத்தில் பிரிட்டனில் வசிக்கும் ஜேர்மன் பிரஜை ஒருவரின் சாட்சியம் தேவைப்படுவதால் அது குறித்து ''இன்டர் போல்'' அமைப்புக்கு அறிவிக்கப்பட்டிருப்பதாக பொலீஸ் அத்தியட்சகர் ஒருவர் தெரிவித்தார்,

இந்தப் பொருள்கள் பொத்துவில் பகுதியில் உள்ள விடுதலைப் புலிகளுக்கு வழங்கப்பட இருந்தவையா என்று விசாரணை நடத்தும் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு சந்தேகம் எழுந்துள்ளது.— இப்படி ''சண்டே லீடர்'' தெரிவித்துள்ளது.

## மீட்கப்பட்ட சைக்கிள்கள் சாவகச்சேரி நீதிமன்றில்

யாழ்ப்பாணம், ஜன. 17

சாவகச்சேரி காவல் பணிமனையால் மீட்கப்பட்ட ஒரு பகுதி சைக்கிள்கள் சாவகச்சேரி தமிழீழ மாவட்ட நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரிமையாளர்கள் தகுந்த ஆதாரங்களைக் காட்டி நாளை 18 ஆம் திகதி தொடக்கம் 20 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை அவற்றை பெற்றுக்கொள்ளலாம் என குறித்த மன்றின் நீதியாளர் அறியத்தந்துள்ளார். (க)

## விரிவுரைகள் 23 ஆம் திகதி

கொழும்பு, ஜன 17

கிழக்கு பல்கலைக்கழக கலை வர்த்தக விரிவுரைகள் இம்மாதம் 23 ஆம் திகதி ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## கோப்பாய் - கைதடி வீதி போக்குவரத்து சீர்கேடு

கோப்பாய் — கைதடி பிரதான வீதி பழுதடைந்து போக்குவரத்து செய்ய முடியாத மிக மோசமான நிலையில் உள்ளது.

இப்பாதையூடாக வரும் சைக்கிள் விறகு வியாபாரிகள் நீண்ட தூரம் விறகுடன் சைக்கிளை உருட்டிச் செல்வதைக் காணமுடிகிறது (க-15)

## மீண்டும் அரசியலில் ஈடுபட ஜே.ஆர். தயாரில்லை

கொழும்பு, ஜன. 17

மீண்டும் அரசியிலோ அல்லது பொது வாழ்விலோ ஈடுபடும் எண்ணம் தமக்கு இல்லை என முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன அறிவித்திருக்கிறார்—

''மீண்டும் அரசியலில் ஜே. ஆர்'' என்ற தலைப்பில் கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றில் வெளியான செய்திக்கு தாம் அனுப்பிய மறுப்புக் கடிதம் ஒன்றிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார்.

''1978 ஆம் ஆண்டு அரசமைப்புக் தொடர்பான சில விளக்கங்களைப் பெறுவதற்காக சில நாடாளுமன்ற உறுப்பினர்கள். என்னைச் சந்திக்க விரும்பினார்கள் நானும் தயாராக இருப்பதாக தெரிவித்தேன்.

ஆனால் அவர்கள் என்னை இது வரை சந்திக்கவில்லை — என்று ஜே ஆர் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

வெற்றுரின்பால் பேணிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு அன்னா தொழிலகம் இணுவில். (சி/293)

யப்பான் தயாரிப்பான புதிய ஹொண்டா EG10-600 ஜெனரேட்டர் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ் 248/1, K. K. S வீதி, யாழ்ப்பாணம். (34725)

### டயறிகள்

சிறிய பெரிய அளவுகளில் பூபாலசிங்கம் டயறிகள் வெளிவந்து விற்பனையாகின்றன. வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு. பூபாலசிங்கம் புத்தக நிலையம் யாழ்ப்பாணம். [சி-286]

### ஆண்டு - 5

Bright இன் மாணவர்களுக்கான விஜயராணி சற்குணராசா B. A. (Hons) S. பாஸ்கரன் B.Sc.(Hons) எழுதிய கணிதம் 60/-. தமிழ் 50/-. கட்டுரைமஞ்சரி 50/-. பூபாலசிங்கம் புத்தகசாலை மற்றும் பிரபல புத்தகசாலைகளில் பெற்றுக்கொள்ளலாம் (34562)

### ரி. வி., டெக் திருத்துதல்

சகல றேடியோக்கள் ரி வி. டெக் எல்லா விதமான மணிக்கூடுகளையும் பழுது பார்த்துக்கொள்ள டில்காவாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி [ஆரியகுளம்சந்தி], யாழ்ப்பாணம். கிளைகள்: கண்டி வீதி, சாவகச்சேரி. மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை. [சி-254]

### புலமைப் பரிசில் - 95

யாழ் Bond நிறுவனத்தாரால் ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான பயிற்சி வினாத்தாள்கள் (கணிதம், தமிழ் விடைகளுடன் 10/- மட்டும்) மாதத்தில் 2ஆவது, 4ஆவது ஞாயிற்றுக்கிழமைகளில் வெளியிடப்படுகின்றன. முன்னணி புத்தக நிறுவனங்களில் பெற்றுக்கொள்ளலாம். [8187]

### மணமகள் தேவை

கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த இந்துசமய, நற்குணமுடைய, சுவிஸில் வேலைபார்க்கும், திருவோண நட்சத்திரத்தையும், உதயத்தில் செவ்வாயுடைய, 27 வயது மணமகனுக்கு படித்த, அழகிய, சிவந்த நிறமுடைய மணமகள் தேவை. பொருத்தமுள்ளோர் சாதக குறிப்புடன் முழுவிவரத்தையும் கீழ்கண்ட விலாசத்துக்கு அனுப்பி வைக்கவும். பொருத்தமற்றவை திருப்பி அனுப்பி வைக்கப்படும். 42, C/o 82, உதயன் பணிமனை கே. கே. எஸ். வீதி, சுன்னாகம். (7863)




(சி-261)

### சங்கீதம்

ஆண்டு 6—11 வரை Bright இன் மாணவர்களுக்கான சங்கீதம் 75/-. எழுதியவர் ஸ்ரீ காந்தா (முன்னாள் கொழும்பு இந்துக்கல்லூரி ஆசிரியர்) பூபாலசிங்கம் புத்தகசாலை மற்றும் பிரபல புத்தகசாலைகளில் பெற்றுக் கொள்ளலாம். (34567)

### விற்பனையாளர் தேவை

பிரபல விற்பனை நிலையத்திற்கு 20 வயதிற்கும் 30 வயதிற்கும் உட்பட்ட ஆங்கில அறிவுடைய ஆண் விற்பனையாளர் தேவை. மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர் விரும்பத்தக்கது. கல்வித்தகைமைகளுடனும் முன் அனுபவ விவரங்களுடனும் 30-1-95 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும். விளம்பரஇல: 750, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (34735)

## அறிவித்தல்

24 - 12 - 94 சனிக்கிழமை திரு. பேதுறுப்பிள்ளை செல்லத்துரையின் மரண அறிவித்தலில் அவரது மகன் திரு. செ. பத்திநாதர் என்பவர் வர்த்தக முகாமையாளர், தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கம் எனப் பிரசுரிக்கப்பட்டது. இவரை வர்த்தக முகாமையாளர் எனப் பிரசுரிக்கப்பட்டது தவறு எனவும் இவர் தற்போது சேவையில் இல்லை. இவர் முன்னாள் பணியாளராவார்.

பொது முகாமையாளர்,
தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கம்,
மானிப்பாய்.

1994 - 12 - 31 (C-182)

## விற்பனை இலிகிதர் (Sales Clerk) தேவை

மின்சார உபகரணங்கள் விற்பனையில் முன் அனுபவமுள்ள 30 வயதிற்கும் 50 வயதிற்கும் உட்பட்ட ஆங்கிலம் எழுத வாசிக்கத் தெரிந்த ஆண் விற்பனை இலிகிதர் (Sales Clerk) தேவை. மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர் விரும்பத் தக்கது. கல்வித்தகைமைகள், முன் அனுபவ விவரங்களுடன் 30 - 1 - 95 ம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும். சம்பளம் நேரில் பேசிக் கொள்ளலாம்.

இல. 751,
மே/பா உதயன்,
யாழ்ப்பாணம். (34736)

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்: 05 — 04 — 1917



இறைவன் அடியில்: 16 — 01 — 1992

அமரர்
### அப்பாபிள்ளை சுந்தரம்பிள்ளை

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய், பண்பின் உறைவிடமாய், பாசத்தின் இருப்பிடமாய் வாழ்ந்த அன்புத் தந்தையே! அப்பா என்று அழைத்த இதழ்கள். அழையாது ஓய்ந்து ஆண்டுகள் மூன்று மறைந்தாலும், உங்கள் அன்பும் கனிவும் நிறைந்த சுந்தர வதனம் எம் நெஞ்சத்தை விட்டு ஒரு போதும் நீங்காதையா. ஆறுமோ நம் துயரம்.

உங்கள் ஆத்மாசாந்தி அடையஇறைவன்திருவடிகளை வேண்டிநிற்கும்;

அன்பு
மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

முணாமலை
மானிப்பாய்.

[34723]

உ



## ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பு

அன்புடையீர்!
18 — 12 — 1994 ஞாயிற்றுக்கிழமை
சிவபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்
**அமரர் தம்பு நடராசா**
அவர்களின்

ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (17 - 01 - 1995) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10-00 மணியளவில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.

அங்களப்பாய்,
இணுவில் மெழக்கு.

[34734]

உ
யாழ்ப்பாணம், சிறாம்பியடி
அருள்மிகு
ஞான வைரவர் ஆலய
## தைப்பூசம் உற்சவம்

இன்று [17—01—95] செவ்வாய்க்கிழமை
மாலை 6-30 மணிக்கு

தெய்வீக பேருரை:
மாலை 7-30 மணிக்கு
விடயம்: ''ஞான வைரவர் வழிபாடு''
நிகழ்த்துபவர்: வாகீச கலாநிதி
கனகசபாபதி நாகேஸ்வரன் எம். ஏ.
அவர்கள்

மங்கள இசை:
கருப்பையா மகேஸ்வரன் குழுவினர்

— உபயகாரர்

(34737)

உ
ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய
## விஷேட உற்சவங்கள்

*தைப்பூசத் திருவிழா:*
தை மாதம் 3ஆம் திகதி (17 - 01 - 95) செவ்வாய்க்கிழமை காலை ஆரம்பமாகும். (அன்று நண்பகல் 12 மணிக்கு எம்பெருமான் வீதி உலா வருவார்)

*சனிப்பிரதோஷ விரதம்:*
தை மாதம் 14ஆம் திகதி (28 - 01 - 95) சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு விசேட அபிஷேகமும், பூசையும் நடைபெறும்.

*பங்குனி உத்தர திருவிழா:*
பங்குனி 3ஆம் திகதி (17-03-95) வெள்ளிக்கிழமை அன்று வைரவப் பெருமான் கும்பாபிஷேக தினம் நடைபெறும்.

*பிரதோஷ விரதம்:*
பங்குனி 30ஆம் திகதி (13-04-95) வியாழக்கிழமை அன்று நண்பகல் 12 மணிக்கு விசேட பூசை அபிடேகம் நடைபெறும்.

*வருடப்பிறப்பு உற்சவம்:*
சித்திரை 1ஆம் திகதி (14-04-95) வெள்ளி மாலை 6 மணிக்கு நடைபெறும்.

முக்கிய குறிப்பு;
விஷேட உற்சவம் சம்பந்தமாகவும், கோயில் கைங்கரியங்கள் பற்றியும் விவரங்களுக்கு எம்முடன் தொடர்பு கொள்க.

பிரதமகுரு:
க. உலககுருநாத ஐயர்,
விசேட உற்சவ உரிமையாளர்'
செல்வச்சந்நிதி, தொண்டமனாறு.

(34274)

### தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
யாழ். மாவட்டம்
## முக்கிய அறிவித்தல்

தனியார் கல்வித் துறையில் தொழில் புரியும் சகல கல்வி நிறுவன இயக்குனர்களும், பிரத்தியேக வகுப்பு நடத்துபவர்களும், ஒன்பது மாணவர்களுக்கும் குறைவான மாணவர்களுக்கு கல்வி கற்பிப்பவர்களும் ஒன்றியத்தில் மீள்பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்ட போதும் மீள்பதிவு செய்யாமல் உள்ளவர்கள் (18-01-1995), புதன்கிழமை அன்று காலை 9-00 மணி முதல் 12-00 மணி வரை கீழ் உள்ள இடங்களில் பின்வரும் நிபந்தனைகளுக்கமைய மீள்பதிவு செய்து கொள்வதற்கு இறுதியான சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது.

இவ்வறிவித்தலுக்கு அமைய மீள்பதிவு செய்யப்படாவிடின் 19-01-1995 முதல். மீள்பதிவு செய்யாத அனைத்து வகுப்புகளும் இயங்குவது நிறுத்தப்படுகிறது. மீள்பதிவு செய்யாமல் இயங்கும் பட்சத்தில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**மீள்பதிவு செய்வதற்கான நிபந்தனைகள்**

★ இதுவரை மீள்பதிவு செய்து கொள்ளாமைக்காக ரூ. 200/- செலுத்தவேண்டும்.

★ இதுவரை செலுத்தப்படாமல் உள்ள சந்தாப் பணம் முழுவதும் செலுத்தப்படல் வேண்டும்.

மீள்பதிவுகள் பின்வரும் அலுவலகங்களில் மேற்கொள்ளப்படும்.

யாழ். கோட்டம், மருதனார்மடம் கோட்டம், பண்டத்தரிப்புக் கோட்டம்.

யாழ். மாவட்ட ஒன்றிய அலுவலகம்,
19, செம்மணி வீதி, யாழ்ப்பாணம்.

வடமராட்சிக் கோட்டம்,
சதா பொன்ஸ், மாலுசந்தி.

தென்மராட்சிக் கோட்டம்,
சுஷாந்திஸ், 23, டச் றோட்,
சாவகச்சேரி.

பொதுச் செயலாளர்,
யாழ். மாவட்டம்.

(சி-174)

### இலங்கைத் தமிழர் பிரச்சினை:
## மத்திய, மாநில அரசுகளின் போக்கு மாறவேண்டும்
### வீரமணி கூறுகிறார்

மாணிலா, ஜன. 17
இலங்கைத் தமிழர் பிரச்சினையில் மத்திய, மாநில அரசுகளின் அணுகுமுறை மாறவேண்டும் என்று திராவிடக்கழக பொதுச்செயலாளர் திரு. இ. வீரமணி கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகளை இங்குள்ள அரசியல் வாதிகள் தங்களின் அரசியல் விளையாட்டுக்களுக்கு துருப்புச் சீட்டுகளாகப் பயன்படுத்தும் நிலை இனி எடுபடாது என்று அவர் கூறியுள்ளார். (க-3)

யாழ்ப்பாணம் வண்ணை குளங்கரை மருதடி
ஸ்ரீகாமாக்ஷி அம்பாள்
தேவஸ்தானம்
## தைப்பூச விழா விஞ்ஞாபனம்

இன்று [17—01—95] செவ்வாய்க்கிழமை மாலை 5-00 மணிக்கு வசந்த மண்டபப்பூசை நடைபெற்று அதனைத் தொடர்ந்து விநாயகர் அம்பாள், முருகன் சமேதகராக புதிய மஞ்சத்தில் ஆரோகணித்து வரும் காட்சியை அடியார்கள் அனைவரும் கண்டு அருள்பெறும் வண்ணம் கேட்டுக்கொள்கிறோம்.

இங்ஙனம்
— உபயகாரர்கள்.

(34733)

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

மெய்கண்ட தேவர் ஆதீனம்
கைலை சர்வோதய ஆதீனம்
## வளம்பெற வாழ்த்துகின்றது

''மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உககமெல்லாம்''

[34732]

### யாழ்ப்பாணக் கல்வி நிலையம்
**The Jaffna Education Centre**
(சாந்தி சினிமா முன்பாக)

ஆண்டு 4 — 10, O/L, A/L
**SPOKEN ENGLISH**
**SHORT · HAND TYPING**
ஆகிய பாடங்கள் இரு மொழிகள் மூலமும் கற்பிக்கப்படுகின்றன.

புதிய பிரிவு ஆரம்பம்:
இன்று **17 · 01 · 1995**

(8200) - இயக்குநர்.

பரிசுத்த பாப்பரசர்
ஆசீர் வழங்கும் படம்
## விற்பனை

20 - 01 - 1995 பரிசுத்த பாப்பரசர் போப்ஜோண் போல் 2 இலங்கை விஜயத்தை நினைவு கூரும் கறுப்பு / வெள்ளை ஆசீர் வழங்கும் படம் விற்பனையாகிக் கொண்டு இருக்கின்றது.

பிரதிகளுக்கு முந்துங்கள்

**மலரும் பொய்கை**
(மக்ஷல் கவுஸ்)
20, யுபிலி பஜார், யாழ்ப்பாணம்.
சாவகச்சேரியில் பரம்ஸ் சிறப்பு அங்காடி,
சாவகச்சேரி.

[சி-294]

### பகுதி நேரப் பேணுநர்கள்
## தேவை
(பெண்கள்)

1. கைக்குழந்தைகளைப் பேணுவோர்.
2. 12 வயதிற்குட்பட்ட பிள்ளைகளைப் பேணுவோர்.

பிள்ளைகளைப் பேணுலதில் அனுபவம் மிக்கவர்கள் தேவை.

தாதிய சேவையில் அனுபவம் மிக்கவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

வயதெல்லை:- **23**வயதிற்கு மேற்பட்டோர்

உரிய சம்பளத்திட்டத்தின் அடிப்படையில் வேதனம் வழங்கப்படும்.

நிரந்தர வேலைவாய்ப்பைப் பெறுவோர் சேமலாப நிதி பெறுவதற்கு உரித்துடையவராவார்.

*விண்ணப்ப முடிவு திகதி:* 31 - 01 - 1995

அனுப்ப வேண்டிய முகவரி:
இல: 749,
மே. பா. உதயன்,
யாழ்ப்பாணம். (சி/172)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளின்புனர்வாழ்வுதிட்ட அறிக்கை அரசிடம்

வடக்கில் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டிய அவசர புனர்வாழ்வுத் திட்டங்கள் அடங்கிய அறிக்கை ஒன்றை விடுதலைப் புலிகள் பிரதிநிதிகள் கடந்த சனி அன்று இடம்பெற்ற சந்திப்பின்போது அரச தரப்பினரின் பரிசிலனைக்கு சமர்ப்பித்தனர் எனத் தெரியவருகின்றது.

இதே சமயம் —

அபிவிருத்தித் திட்டங்கள் பற்றிய அரசதரப்பு அறிக்கை ஒன்றும் புலிகளிடம் கையளிக்கப்பட்டதாக அரச தரப்புக் குழுத்தலைவர் கே பாலபட்ட பெண்டி தெரிவித்தார்.

புலிகள் சமர்ப்பித்ததிட்டங்களும் தாங்கள் சமர்ப்பித்த திட்டங்களும் ஏறத்தாழ ஒரே மாதிரியானவை என்று கூறிய அவர் —

முன்னுரிமை அடிப்படையில் அவை செயற்படுத்தப்படும் என்றும் குறிப்பிட்டார்.

விடுதலைப் புலிகள் சமர்ப்பித்த புனர்வாழ்வுத் திட்டங்கள் பற்றிய அறிக்கையில் மின்சாரம், நீர் வி நியோகம் பற்றிக் குறிப்பிடப்பட்டிருப்பதாகவும்—

அபிவிருத்தி அதிகார சபைகளை யாழ்ப்பாணத்தில் ஏற்படுத்தும் யோசனைகள் தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-3-9)

# புலிகள் - பொலீஸார் வவுனியாவில் சந்திப்பு

## வவுனியாவில் வியாழனன்றுநடந்தது

கொழும்பு, ஜன. 17

போர் இடைநிறுத்தம் அமுலுக்கு வந்ததை அடுத்து வவுனியாவில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவ அதிகாரிகளுக்கும் இடையே கடந்த வியாழனன்று சந்திப்பு இடம்பெற்றது.

முற்பகல் 11.00 மணியளவில் வவுனியா- மன்னார் வீதி பூவரசம் குளம் எல்லைப் புறத்தில் சனநடமாட்டம் இல்லாத இடத்தில் இந்த சந்திப்பு இடம் பெற்றதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

முன்னரே செய்யப்பட்ட ஏற்பாட்டின் படி பூவரசம் குளம் மன்னார் வீதியில் — இராணுவக் கட்டுப்பாட்டு பகுதியின் எல்லையில் — சிவப்பு நிறக் கொடி ஏந்தியவாறு விடுதலைப் புலிகளின் வரவை எதிர்பார்த்து பொலீஸார் காத்து நின்றனர்.

பறையனாளம் குளம் பகுதியில் இருந்து இராணுவச் சீருடை நிறத்திலான 'பிக்-அப்' வாகனம் ஒன்றில் விடுதலைப் புலிகள் அங்கு வந்து இறங்கினர்.

விடுதலைப் புலிகளின் குழுவுக்கு தளபதி நீகன் தலைமை வகித்தார்.

விடுதலைப் புலிகள் தளபதிகள் அங்கு வந்து இறங்கியதும் இருதரப்பாரும் ஒருவரை ஒருவர் கட்டித்தழுவி கை கொடுத்து வரவேற்றனர். பின்னர் அப்பகுதியில் கைவிடப்பட்ட நிலையில் இருந்த தேவாலயம் ஒன்றுக்கு விடுதலைப் புலிகளின் தளபதிகளை பொலீஸார் அழைத்துச் சென்றனர்.

அங்கு வைத்து இராணுவ அதிகாரிகளுடன் அவர்கள் உரையாடினர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சிமெந்து விநியோகம்

யாழ்ப்பாணம் பலநோக்கு கூட்டுறவு சங்கம் அதன் கிளைகளினூடாக அங்கத்துவ பணம் செலுத்தியவர்களுக்கு சிமெந்தை விநியோகித்து வருகின்றது. ஒருபைக்கெட் சிமெந்து 650 ரூபாவாக விற்கப்பட்டு வருகின்றது. (க-17)

# தெற்கில் கடந்த வருடம் 315 வாகனங்கள் கடத்தல்

தென்னிலங்கையில் கடந்த வருடம் 315 வாகனங்கள் கடத்தப்பட்டதாகப் பொலீஸ் திணைக்களம் தெரிவிக்கிறது.

இவற்றுள் 82 வாகனங்கள் மாத்திரமே இதுவரை கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

காணாமற்போன வாகனங்களுள் 272 மோட்டார் சைக்கிள்கள், 53 வான்கள், 17 கார்கள், 15 ஒட்டோக்கள், 15 ஜீப்புகள், 5 லொறிகள், 3 பஸ்கள், 2 டிராக்டர்கள் ஆகியன அடங்கும்.

# விவசாய சமாசத்துக்கு கப்பல் மூலம் பொருள்கள்

## பால்மா, சவர்க்காரம் வரும்

யாழ். மாவட்ட விவசாய உற்பத்திக் கூட்டுறவு சமாசம் கொழும்பில் இருந்து கப்பல் மூலம் உணவுப் பொருள்களை தருவிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

கொழும்பில் இருந்துமாதாந்தம் ஆயிரம் மெற்றிக் தொன் உணவுப் பொருள்களை கப்பல் மூலம் கொண்டு செல்வதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

இதற்கமைய பால்மாவகைகள், சவர்க்காரம், சிமெந்து போன்றவற்றை முதற்கட்டமாக எடுத்து வருவதற்கான ஏற்பாடுகளில் மேற்படி சமாசம் ஈடுபட்டுள்ளது. (ஒ-17)

# யாழ். மாவட்டத்துக்கு கூடுதல் உணவு பொருள்கள்

கொழும்பு,ஜன. 17

யாழ். மாவட்டத்துக்கு கூடுதலான உணவுப் பொருள்களை அனுப்ப அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

10 ஆயிரம் மெற்றிக் தொன் சீனி, 250 மெற்றிக் தொன் பருப்பு, 2 லட்சத்து 50 ஆயிரம் பைக்கெட் பால்மா ஆகியன யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்படுவதாக கூ. மொ. வி. ஸ்தாபனத் தலைவர் எஸ். வி. சிறிசேன தெரிவித்தார்.

காங்கேசன் துறையில் கூ. மொ. வி. ஸ்தாபனத்தில் களஞ்சியத் தொகுதி ஒன்றை திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. (இ-3)

# படையினர் இருவர் பலி

கடந்த 8ஆம்திகதி வடக்கில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு மற்றும் துப்பாக்கிச் சூட்டு விபத்துச் சம்பவங்களில் இரு படையினர் உயிரிழந்தனர்.

வெற்றிலைக்கேணியில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த சிப்பாய்கள் கடமை மாறும் சமயம் சிப்பாய் ஒருவரின் கிரனேட் தவறுதலாக கீழே விழுந்து வெடித்ததில் சிப்பாய் பலியானார்.

பலாலியில் துப்பாக்கி ஒன்றை சிப்பாய் ஒருவர் துப்புரவு செய்து கொண்டிருந்த சமயம் அது வெடித்ததில் மற்றொரு சிப்பாய் உயிரிழந்தார். (உ)

# உள்ளூர் உருளைக்கிழங்கு சந்தைகளில் விற்பனை

யாழ்ப்பாணம், ஜன. 17

யாழ். நகரப் பகுதிகளில் உள்ளூர் உருளைக்கிழங்கு விற்பனைக்கு வந்துள்ளது.

விவசாயிகள் சிலர் கொழும்பில் இருந்து விதை உருளைக்கிழங்கை தருவித்து வருட இறுதியில் பயிரிட்டிருந்தனர்.

தற்சமயம் அறுவடை நடைபெற்று வருகின்றது. கிலோ 65 ரூபாவாக சந்தைகளில் கிழங்கு விற்பனைக்கும் வந்துள்ளது.

இதேவேளை கொழும்பில் இருந்து கப்பல் மூலம் தருவிக்கப்பட்ட 400 மெ. தொன் விதை உருளைக்கிழங்கு ஏற்கனவே விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருந்தது.

இந்த விதை கிழங்கும் பயிரிடப்பட்டுள்ளதாக விவசாய திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஒ-17)

# வர்த்தகர் சங்கம் நிராகரிப்பு

கொழும்பு, ஜன. 17

இரண்டு ஆண்டுகளுக்கு சம்பள அதிகரிப்பு செய்வதில்லை என்ற ஜனாதிபதி சந்திரிகாவின் யோசனையை முக்கிய தொழிற் சங்கமான சிலோன் மேர்கன்டைல் தொழில் மற்றும் பொதுத் தொழிலாளர் ஊழியர் சங்கம் (இலங்கை வர்த்தகர் சங்கம்) நிராகரித்து விட்டது. (க-ஐ)

# சாரதா சேவாச்சிரம அன்பளிப்பு

யாழ். இந்து மகளிர் கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆகியவற்றின் நூலக அபிவிருத்திக்கென பருத்தித்துறை ஸ்ரீ இராம கிருஷ்ணசாரதா சேவாச்சிரமம் தலா 5ஆயிரம் ரூபாவை அன்பளிப்பாக வழங்கியுள்ளது. (க-173)

## நோர்வேயின் உதவி நிறுத்தத்தால்

# செஞ்சிலுவைச்சங்க நடவடிக்கை ஸ்தம்பிதம் அடையும் ஆபத்து

கொழும்பு, ஜன. 17

ஸ்ரீலங்கா செஞ்சிலுவைச் சங்கத்துக்கான நிதி உதவிகளை நோர்வே செஞ்சிலுவைச் சங்கம் இடை நிறுத்தி வைத்திருப்பதை அடுத்து —

ஸ்ரீலங்கா செஞ்சிலுவைச் சங்கத்தின் பல்வேறு நடவடிக்கைகள் ஸ்தம்பிதமடையும் ஆபத்து ஏற்பட்டிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

அழிவு நடவடிக்கைகளை எதிர் கொள்வதற்காக அவசரத் திட்டம், அகதி முகாம்களைப் பராமரித்தல் போன்ற சங்கத்தின் முக்கிய செயற்பாடுகளை நிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும்—

சங்கத்தில் இணைந்து வேலை செய்யும் நூற்றுக்கணக்கான வெளிக்கள உத்தியோகத்தர்கள் வேலையை இழக்கும் சூழ்நிலை உருவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஸ்ரீலங்கா செஞ்சிலுவைச் சங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட கணக்கறிக்கைகள் மீதான கணக்காய்வில் அதிருப்தியான அறிக்கைகள் கிடைத்ததை அடுத்தே, நிதி உதவியை இடை நிறுத்த நோர்வே செஞ்சிலுவைச் சங்கம் முடிவு செய்தது.

சங்கத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் சங்கத்தின் நிதி, வாகனங்கள், கருவிகள் ஆகியவற்றைத் தவறாகப் பயன்படுத்தியதான குற்றச்சாட்டுக்களை அடுத்தே நிதி உதவி வழங்கும் நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது சங்கத்தின் வாகனங்களும் நிதியும் பிரசார வேலைகளுக்கு பயன்படுத்தப்பட்டதாகவும் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

ஸ்ரீலங்கா செஞ்சிலுவைச் சங்க அதிகாரி ஒருவருடன் தொடர்பு கொண்ட போது—

அவர் இந்தக் குற்றச்சாட்டுக்களை அடியோடு மறுத்ததோடு, இந்தப் பிரச்சினை தற்போது தீர்க்கப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டார். (உ)

# குளம் புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 17

துரித நீர்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பிரமாண அடிப்படையிலான மூலதன ஒதுக்கீட்டு நிதியைக் கொண்டு வலிகாமம் பகுதியில் அமைந்திருக்கும் அச்சாளைக்குளம் தேச நிர்மாணிகளால் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது. (ஒ)

# இரவில் பூவரச மரம் திருட்டு

யாழ்ப்பாணம், ஜன. 17

கோப்பாய் கைதடி வீதியில் அமைந்திருக்கும் மயானத்தில் நீண்ட வருடங்களாக நின்ற பாரிய பூவரசமரமொன்று திருடிச்செல்லப்பட்டுள்ளது.

இரவுநேரம் வாள் கொண்டு அரிந்து இம்மரம் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. (க-15)


FARM TRUST

வெற்றிவாகை சூடிய ஃபிரீஸியன் பசுக்களின் செழுமையும் போசாக்கும் மிக்க பால்

...உங்கள் பிள்ளைக்கு.



உங்கள் பிள்ளை ஃபாம் ட்ரஸ்ட் முழுஆடைப்பாலின் பாலாடைச் சுவையை நிச்சயம் விரும்பும். ஏனெனில் ஃபாம் ட்ரஸ்ட் உலகிலேயே சிறந்த பால்தரும் இனமான ஒல்லாந்தைப் பிறப்பிடமாகக் கொண்ட ஃபிரீசியன் பசுக்களின் புதுமை குன்றாத பால்.

ஃபாம் ட்ரஸ்ட் பாற் புரதங்கள் நிறைந்ததும் உண்மையிலேயே போசாக்கும் மிக்கது. அதன் தரச்சிறப்பு உற்பத்தியின் முதற்படியிலிருந்தே உத்தரவாதமளிக்கப் படுகின்றது.

விற்றமின்கள் சேர்க்கப்பட்ட ஃபாம் ட்ரஸ்ட் ஒரு ஒல்லாந்து ஹூக்வெற் பி. வியின் உற்பத்தி.




QUALITY ASSURED GUARANTEED HOOGWEGT GROUP B.V. HOLLAND AT SOURCE

ஃபாம் ட்ரஸ்ட்

நீங்கள் நம்பத்தகுந்த பால்

LDB LINTAS

முகவர்:- ஸ்ரீ விக்னேஷ்வரா ஸ்டோர்ஸ் சாவகச்சேரி, யாழ்ப்பாணம்.

(சி/168)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஜனாதிபதியின் பாதுகாப்புக்கு பொறுப்பான

# அதிரடிப் பிரிவு கொமாண்டோக்கள் பாப்பரசருக்கு பாதுகாப்பளிப்பர்!

கொழும்பு, ஜன. 17
எதிர்வரும் 20 ஆம் திகதி கொழும்புக்கு வரும் பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பருக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு பாதுகாப்பு அளித்து வரும் அதிரடிப் படைப் பிரிவைச் சேர்ந்த கொமாண்டோக்கள் பாதுகாப்பளிப்பர் என்று பொலீஸ்மா அதிபர் பிராங் டி சில்வா தெரிவித்துள்ளார்.

பாப்பரசருக்கு மலர்மாலை அணிவித்தோ அல்லது மலர்ச்செண்டு கொடுத்தோ வரவேற்பதற்கு எவரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாப்பரசர் இருக்கும் இடத்தில் இருந்து 30 மீற்றர் தொலைவுக்கு அப்பாலேயே மக்கள் அனுமதிக்கப்படுவர். [ஐ]

### பாப்பரசரின் விஜயத்தை ஒட்டி பாதுகாப்பு தீவிரம்

# அமெரிக்காவின் குண்டு நிபுணர்கள் ஆசிய நாடுகளுக்கு விரைவு!

### சர்வதேச விமான சேவைகள் உஷார்படுத்தப்பட்டன

மணிலா, ஜன. 17
பரிசுத்த பாப்பரசரின் ஆசிய நாடுகளுக்கான விஜயத்தை முன்னிட்டு சர்வதேச விமானப் போக்குவரத்துக்கள் உஷார்படுத்தப்பட்டுள்ளன.

முஸ்லிம் அடிப்படை வாதிகளிடமிருந்து கிடைத்த அச்சுறுத்தல்களை அடுத்து ஆசிய நாடுகளுக்கான இரு அமெரிக்க விமானங்கள் திசை திருப்பப் பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் —

ஆசியா நோக்கிச் செல்லும் அமெரிக்க விமானங்களுக்கு எதிராக இஸ்லாமிய தீவிரவாதிகள் குண்டுத் தாக்குதல்களை நடத்தக்கூடும் என மணிலாவில் இருந்து அதிகாரிகள் விடுத்த எச்சரிக்கையைத் தொடர்ந்து —

அமெரிக்க குண்டு நிபுணர்கள் பிலிப்பீன்ஸ் தலைநகர் மணிலாவுக்கும் ஆசிய நாடுகள் பலவற்றின் தலை நகரங்களுக்கும் விரைந்துள்ளனர்.

பரிசுத்த பாப்பரசர் பிலிப்பீன்ஸில் நான்கு நாள் பயணத்தை முடித்துக் கொண்டு நேற்று பாபுவா நியூகினிக்குப் புறப்பட இருந்தார். அங்கிருந்து ஆஸ்திரேலியாவுக்கும் இலங்கைக்கும் அவர் விஜயம் செய்வார்.

தமது பிலிப்பீன்ஸ் விஜயம் மகிழ்ச்சிகரமாக இருந்ததாக பாப்பரசர் கூறியுள்ளார்.

மணிலா நகரின் மத்திய பகுதியில் பாப்பரசர் கலந்து கொண்ட ஒரு வைபவத்தில் சுமார் 40 லட்சம் மக்கள் கலந்து கொண்டனர்.

பாப்பரசர் கலந்துகொண்ட நிகழ்ச்சி ஒன்றில் இவ்வளவு அதிகமான மக்கள் திரண்டிருந்தது இதுவே முதல்முறை என்று வர்ணிக்கப்பட்டது. (ஐ-இ-க)

## பாப்பரசரை தரிசிக்க 8,000 பேர் கொழும்புக்கு!

### யாழ்ப்பாணத்திலிருந்து செல்வர்

கொழும்பு, ஜன. 17
பாப்பரசரைத் தரிசிப்பதற்காக சுமார் 8 ஆயிரம் பேர் யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா ஊடாக வருவர் என எதிர்பார்க்கப்படுவதாகவும் —

வவுனியாவிலிருந்து ரயில் மூலம் கொழும்பு வரும் அவர்களுக்கு தங்குமிட வசதிகளை இராணுவத்தினரும் கத்தோலிக்க திருச்சபையினரும் வழங்குவர் என்றும் —

''த சண்டே லீடர்'' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

வடக்கிலிருந்து வரும் பயணிகளுக்கான வவுனியாவிலிருந்து விசேட ரயில் சேவைகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

வடக்கிலிருந்து வரும் பயணிகளுக்கு இராணுவத்தினரும் பொலீஸ் மகளிர் பிரிவினரும் பொறுப்பாக இருப்பர் என்று பொலீஸ் மா அதிபர் பிராங் டி சில்வா தெரிவித்தார் (உ)

### விவசாய பயிற்சி வகுப்பு

நல்லூர் பிரதேச செயலக வதிவிட வேளாண்மைப் போட்டிக்கான பயிற்சி வகுப்புக்கள் கிராம அலுவலர்களுக்கும், அவர்களது பிரிவில் உள்ள போட்டியாளர்களுக்கும் நடத்தப்பட உள்ளன.

ஜே—89 தொடக்கம் ஜே—108 வரையான பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு இன்று 17 ஆம் திகதியும் —

ஜே — 109 தொடக்கம் ஜே — 128 வரையான பிரிவுகளைச் சேர்ந்தோருக்கு எதிர்வரும் 19 ஆம் திகதியும் திருநெல்வேலியில் உள்ள விவசாயக் கல்லூரியில் பயிற்சி வகுப்புகள் இடம் பெறவுள்ளன. (ஐ)

### பாப்பரசர் பங்குபற்றும் நிகழ்ச்சி:

## காலிமுகத்திடலில் மட்டும் 75 சோதனை நிலையங்கள்

கொழும்பு, ஜன. 17
எதிர்வரும் 21 ஆம் திகதி பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் கலந்து கொள்ளும் பகிரங்க ஆராதனை நிகழ்ச்சியை ஒட்டி கொழும்பு காலி முகத்திடலில் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

காலிமுகத் திடலினுள் செல்லும் நுழை வாயிலில் மட்டும் 75 இடங்களில் சோதனை நிலையங்கள் நிறுவப்படும்.

வடபகுதி உட்பட நாட்டின் சகல பகுதிகளிலும் இருந்தும் அங்கு வரும் யாத்திரிகர்கள் அனைவரும் இந்த சோதனை நிலையங்களூடாக சோதனைக்கு உட்படுத்தப்படுவர் என்றும்—

அச்சந்தர்ப்பத்தில் பொதுமக்கள் பொலீஸாருக்கு இயன்றவரை ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் பொலீஸ்மா அதிபர் பிராங் டி சில்வா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### கணிதபாட விசேட செயலமர்வு

ஜி. சி. ஈ சாதாரண தரப் பரீட்சையில் ஏனைய பாடங்களில் சித்தி அடைந்து கணித பாடத்தில் 20 இலும் குறைந்த புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கான விசேட கணித செயலமர்வு 23 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 3-30 மணிக்கு கோப்பாய் கணித விஞ்ஞான மூலவள நிலையத்தில் ஆரம்பமாக உள்ளது

செயலமர்வில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் அன்றைய தினம் தவறாது சமுகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளது— (க)

# பாப்பரசர் விஜயம்: நிகழ்ச்சி நிரல்

கொழும்பு, ஜன. 17
பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பரின் விஜயம் தொடர்பான நிகழ்ச்சி நிரல் கொழும்பில் வெளியிடப்பட்டுள்ளது.

**20ஆம் திகதி வெள்ளிக்கிழமை**

★ பிற்பகல் 3மணி—பரிசுத்த பாப்பரசரும் அவரது குழுவினரும் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வந்து இறங்குவர்.

குவாண்டர்ஸ் விமான சேவை பாப்பரசரை அழைத்து வருகிறது.

★ 3-15மணி; ரத பவனியாக பரிசுத்த பாப்பரசர் விமான நிலையத்தை விட்டு மோட்டார் பவனியாக ஜனாதிபதி செயலகம் செல்வார்.

★ 4-30 மணி: பரிசுத்த பாப்பரசர் கொழும்பு 1இல் உள்ள ஜனாதிபதி செயலகத்தை வந்தடைவார். அங்கு அவருக்கு வரவேற்பு அளிக்கப்படும்.

★ 5-15 மணி: பாப்பரசர் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை சந்திப்பார்.

★ 5-55 மணி: ஞாபகார்த்த முத்திரை வெளியீடு. 6-00 பரிசுத்த பாப்பரசர் ஜனாதிபதி மாளிகையிலிருந்து கொட்டாஞ்சேனை புனித லூசியாஸ் தேவாலயத்திற்குப் புறப்பட்டுச் செல்வார்.

★ 6-15 மணி: புனித லூசியாஸ் தேவாலயம் வந்தடைதல். குருப் பிரசாதிகள், சங். சகோதரிகள் குருமடத்தில் பயில்வோர் மதசார்புத் தலைவர்கள் கலந்து கொள்ளும் மாலைப் பிரார்த்தனை.

★ 7-30 மணி: வத்திக்கான் தூதரகத்துக்குப் புறப்படுதல்.

★ 7-45 மணி: வத்திக்கான் தூதரகத்தை அடைதல். இரவு இங்கு பாப்பரசர் தங்கியிருப்பார்.

**21 ஆம் திகதி சனிக்கிழமை**

★ மு.ப 8-00 மணி — கொழும்பு பௌத்தாலோக்க மாவத்தையில் உள்ள பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்துக்கு புறப்படுதல்.

★ மு. ப. 8 - 10 மணி மாநாட்டு மண்டபத்தை வந்தடைதல்.

★ 8-15 மணி: வரவேற்பு மண்டபத்தில் வேறு சமயத் தலைவர்களைச் சந்தித்தல்.

மு. ப. 9-00 மணி: காலிமுகத்திடலுக்குப் புறப்படுதல்.

★ 9-15 மணி: காலிமுகத்திடலை வந்தடைதல்.

★ 9-45 மணி: வண. ஜோசப் வாஸ் அடிகளாருக்கு முத்திப்பேறு பட்டம் வழங்கும் ஆராதனை.

★ 12-55மணி கொழும்பு-8 கின்சி வீதியிலுள்ள அதிமேற்றிராணியார் இல்லத்துக்குப் புறப்படுதல்.

★ 1-00 மணி: அதிமேற்றிராணியார் இல்லத்தை வந்தடைதல். இலங்கையின் கத்தோலிக்க ஆயர் மாநாட்டு உறுப்பினர்களைச் சந்தித்து அவர்களுடன் பகல் உணவு அருந்துதல்

★ 2-00மணி; வந்திக்கான் தூதரகத்துக்குப் புறப்படுதல்.

★ 2-15 மணி வத்திக்கான் தூதரகத்தை வந்தடைதல். ஓய்வெடுத்தல்.

★ 3-20மணி வத்திக்கான் தூதரகத்திலிருந்து கொழும்பு - 5இல் உள்ள பொலீஸ் பூங்காவிற்குப் புறப்படுதல்.

★ 3-40 மணி; ஹெலிக்கொப்டர் மூலம் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்குப் புறப்படுதல்.

★ 4-00 மணி: சர்வதேச விமான நிலையத்தை வந்தடைதல். வழி அனுப்பு வைபவம் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நடைபெறும்.

★ 4-30மணி: பரிசுத்த பாப்பரசர் 2 ஆவது அருளப்பர் சின்னப்பரும், குழுவினரும் ஏயர்லங்கா விமானத்தில் இலங்கையை விட்டுப் புறப்படுதல். (ஐ)

### புலிகளின் குரல் வானொலியில்

**17 — 01 — 1995**
**செவ்வாய் இரவு**

★ 8-01—ஊர்சுற்றும் ஒலிவாங்கி
★ 8-10—அறிந்து கொள்ளுங்கள்- தகவற் களஞ்சியம்
★ 8-20—நலந்தானா— 'மனிதனின் மூட்டுக்களில் ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்கு வைத்திய கலாநிதி சுப்பிரமணியம் அவர்கள் ஆலோசனை வழங்குவார்.
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — கருத்துக்களம்- தி. இராஜேஸ்வரன் எழுதிய ''தியாகம்''
★ 8-50—மலரும் மொட்டுக்கள்.
★ 9-00 — மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

**18 — 01 — 1995**
**புதன் காலை**

★ 7-03 — மாவீர வணக்கம்
★ 7-15 — நீங்கள் கேட்டவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி
★ 8-00 மணிக்கு காலை நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

### தமிழீழ வானொலி

**ஒலிபரப்பு**
**செவ்வாய் மாலை**

★ 5-01 - சிந்தனை சிதறல்
★ 5-02 — எழுச்சிக்கீதம்
★ 5-10 — புதியவை
★ 5-15 — தமிழிசை
★ 5-30 — வானொலி மதியூகம் இல. 03
★ 6-00 — சிந்தனைக்குச் சில வினாடிகள்
★ 6-02—இவ்வாரம் இவர் நிகழ்ச்சியில்- விளையாட்டுவீரர் க. சுபாஸ்கரன் அவர்களுடனான செவ்வி
★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
★ 6-20 — என் தெரிவு
★ 8-30 —மணிக்கு மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

### அறிவியலரங்கு

தென்மராட்சி, ஜன. 17
சாவகச்சேரி நகரசபை பொது நூலக வாசகர் வட்டத்தின் மாதாந்த அறிவியலரங்கு நாளை 18 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3. 30 மணிக்கு நகரசபை சபா மண்டபத்தில் வட்டத் தலைவர் சி. நடராசா தலைமையில் நடைபெறும்.

இந்த அறிவியலரங்கில் ''மதுரை முதல் தஞ்சை வரை தமிழ் இலக்கிய எழுச்சியும் வீழ்ச்சியும்'' என்னும் தலைப்பில் ஆசிரியர் த. நாகேஸ்வரன் உரையாற்றுவார். (க-117)

### பல்கலைக்கழக கத்தோலிக்க மாணவர் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 17
யாழ். பல்கலைக்கழக மாணவ. மாணவியருக்கான திருப்பலி ஒப்புக்கொடுத்தலும், அதனைத் தொடர்ந்து சிறப்புக் கூட்டமும் எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நல்லாயன் நடு நிலையத்தில் நடைபெறும். வண. எம். றெஜில் ராஜநாயகம் தெரிவித்துள்ளார்.

திருப்பலி ஒப்புக்கொடுத்தல் [illegible] நடைபெறும். (இ)

# நிலுவையை செலுத்த முடியாத நிலையில் தொண்டாவின் பேரன்!

கொழும்பு, ஜன. 17
எயர்லங்கா நிறுவனத்தின் சென்னை திருச்சி முகவரும்— அமைச்சர் தொண்டமானின் பேரனுமான —ஆறுமுகம் தொண்டமானினால் எயர்லங்கா நிறுவனத்துக்குச் செலுத்தப்படபட வேண்டிய பெருந்தொகை நிலுவை இன்னும் செலுத்தப்படாமலேயே இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஒரு பகுதி நிலுவை செலுத்தப்பட்டதை அடுத்து எஞ்சிய பகுதியை தவணை முறையில் செலுத்த இணக்கம் காணப்பட்டிருந்தது

ஆனால் டிசம்பர் மாதத்துச்குரிய தவணைப் பணமான ஐம்பது லட்சம் ரூபா இன்னும் செலுத்தப்படவில்லையாம். [உ]

## கிழக்கில் மீண்டும் உள்ளூராட்சி தேர்தல்?

நாட்டின் ஏனைய பகுதிகளில் இருக்கும் உள்ளூராட்சி சபைகளுக்கான நேர்தல்கள் எதிர்வரும் ஜூன் மாதம் நடத்தப்படும் போது கிழக்கிலும் மீண்டும் உள்ளூராட்சி தேர்தல்களை நடத்த அரசு உத்தேசித்திருப்பதாக கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணம் தவிர்ந்த நாட்டின் ஏனைய பகுதிகளில் 1991 மே மாதம் மாநகரசபைகள், நகரசபைகள் மற்றும் பிரதேச சபைகளுக்கான தேர்தல்கள் நடத்தப்பட்டன. இவற்றின் நான்கு வருட பதவிக்காலம் எதிர்வரும் மே மாதத்துடன் முடிவடைய உள்ளது.

கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் கடந்த வருடம் நடத்தப்பட்டன. எனினும் உள்ளூராட்சி தேர்தலை இவ்வருடம் மீண்டும் அங்கு நடத்த அரசாங்கத்தினால் முடியும் என்று தேர்தல் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

சகல மாகாணங்களிலும் உள்ளூராட்சி சபைகள் ஏக காலத்தில் 4 வருடங்கள் பதவியில் இருக்க வசதி செய்யும் வகையிலேயே இந்நடவடிக்கையை அரசு மேற்கொள்ளவுள்ளதாகத் தெரியவருகிறது. (ஐ)

### துரைராஜா ஞாபகார்த்த மண்டபம்

வடமராட்சி, ஜன. 17
பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் அமைக்கப்பட்ட பேராசிரியர் துரைராஜா ஞாபகார்த்த மண்டபம் இம் மாதம் 23 ஆம் திகதி பிற்பகல் 1-30 மணிக்கு திறந்து வைக்கப்படும்.

கல்லூரி பழைய மாணவர் சங்கத் தலைவர் திரு. டி. ஆர். அருமைநாயகம் தலைமையில் நடைபெறும் இம் மண்டபத் திறப்புவிழாவில் யாழ். கல்வி வலயம் இரண்டின் கல்விப்பணிப்பாளர் திரு க. கந்தசாமி அன்னாரின் உருவப்படத்தை திரைநீக்கம் செய்துவைப்பார். (க-173)

### ஆலய புனரமைப்பு

அல்வாய் வேவிலந்தை ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலயம் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

கடந்த கால அனர்த்தங்களினால் சேதமடைந்த இந்த ஆலயத்தில் தவிர்க்க முடியாத காரணத்தால் மகா கும்பாபிஷேகம் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

இந்த ஆலயத்தின் தரிசன மண்டபம், வசந்த மண்டபம், மகாமண்டபம், யாக மண்டபம், பரிவாரமூர்த்திகளின் இருப்பிடங்கள், தூபிகள், பொம்மைகள் என்பன பூரணமாக திருத்தப்பட்டு மகாகும்பாபிஷேகம் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. (க-173)


## உதவி மருத்துவ சேவையாளர் (AMP)

# கற்கை நெறிக்கான விண்ணப்பம்

மேற்படி கற்கை நெறியின் 1995ஆம் கல்வி ஆண்டிற்கான விரிவுரைகளும் பயிற்சி நெறிகளும் தமிழீழ மருத்துவக் கல்லூரியில் விரைவில் ஆரம்பிக்கப்பட இருப்பதனால் தகுதி வாய்ந்த மாணவர்களிடம் இருந்து அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமை:

1. க. பொ. த. (உ/த)
உயிரியல் பிரிவில் (BIOLOGY) சித்தி
2. க. பொ. த. (சா/த) ஆங்கிலத்தில் சித்தி

விண்ணப்பங்கள் கீழ்க்காணும் மாதிரிப்படிவத்திற்கு அமைய பூர்த்தி செய்யப்பட்டு 31 - 01 - 1995க்கு முன்னர் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| பொறுப்பாளர் | | பொறுப்பாளர் |
| கல்விப்பகுதி, | | கல்விப்பகுதி, |
| விடுதலைப் புலிகள் | அ | விடுதலைப் புலிகள் |
| மருத்துவப் பிரிவு, | ல் | மருத்துவப் பிரிவு, |
| நடுவப் பணியகம், | ல | கிளை நடுவப்பணியகம், |
| சுண்டிக்குளி, | து | திருநகர், |
| யாழ்ப்பாணம். | | கிளிநொச்சி. |

### மாதிரி விண்ணப்பப் படிவம்

01. முழுப் பெயர்:
02. பிறந்த திகதி:
03. தற்போதைய முகவரி:
04. நிரந்தர முகவரி:
05. பரீட்சை பெறுபேறுகள்:

1. க. பொ. த. (உ/த) உயிரியல்
(கூடிய புள்ளி பெற்ற தேர்வு விவரம்)
(அ) பரீட்சைக்கு தோற்றிய இடம்:
(ஆ) பரீட்சைக்கு தோற்றிய ஆண்டு:
(இ) பெற்ற மொத்தப் புள்ளி:
(ஈ) பெறுபேறு:

| இல. | பாடம் | நிலை |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |

2. க. பொ. த. (சா/த) ஆங்கிலம்

| ஆண்டு | நிலை |
|---|---|
| | |

மேற்கூறிய விவரங்கள் யாவும் எனது அறிவுக்கெட்டிய வரையில் உண்மை என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

.................... திகதி ........................................ விண்ணப்பதாரியின் ஒப்பம்.

(பி-183)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## அக்கறை உண்மையா?

மேலும் இருபத்திரண்டு பொருள்கள் மீதான தடையை அரசாங்கம் நீக்கவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அதேவேளை பெற்றோல் மற்றும் டீசல் உட்பட்ட ஏழு பொருள்கள் மீதான தடைகள் தொடரும் என்பது பிந்திய கொழும்புத் தகவல். அரசாங்கத்தின் இது சம்பந்தமான உத்தியோக பூர்வ அறிவித்தல் இன்று அல்லது நாளை வர்த்தமானி மூலம் வெளியிடப்படக்கூடும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இப்போது தடைவிதிக்கப்பட்டுள்ள மொத்தம் 29 பொருள்களில் 22 மீதான தடையை நீக்குவது என்ற தகவல், யாழ்ப்பாணத்தில் சனிக்கிழமை நடைபெற்ற மூன்றாம் கட்டப் பேச்சு வார்த்தையின் பின்னரும் பிரஸ்தாபிக்கப்பட்டது. எனினும் தடை நீக்கப்பட உள்ள பொருள்கள் எவை என்பது தெளிவாக்கப்படவில்லை.

எனவே, அரசாங்கத்தின் வர்த்தமானி வெளியிடப்பட்ட பின்னர் தான், தடை நீக்கப்படும் பொருள்களின் சரியான விவரம் தெரியவரும். எனினும் கொழும்புத் தகவல்களின் பிரகாரம் பெற்றோல், டீசல் ஆகியவற்றின் மீதான தடையை நீக்கும் எண்ணம் அரசுக்கு இல்லை என்றே அறிய வருகிறது.

இது கவலை தருவதும், கண்டிக்கப்பட வேண்டியதுமான ஓர் உத்தேச முடிவாகும். வடபகுதிக்கு மின்சாரம் மற்றும் தொலைத் தொடர்பு வசதிகளைச் செய்யப்போவதாகக் கூறிவரும் அரசு, முக்கிய எரிபொருள்களான பெற்றோல், டீசல் ஆகியவற்றின் தடையை தொடர நினைப்பது அர்த்தமற்ற ஒன்றாகும்.

எரிபொருள்களை போர்ப் பாவனைப் பொருள்களாக மட்டும் அரசு பார்ப்பது கண்டிக்கப்பட வேண்டியது. அவை மக்களின் அன்றாடப் பாவனைக்கும் உரியவை. அன்றாட வாழ்க்கை இயக்கத்துக்கு அவசியமானவை என்பதனை அரசு உணரத் தவறியது ஏனோ?

மக்களின் போக்குவரத்து, பாவனைப் பொருள்களைச் கொண்டு வந்து சேர்த்தல், அவற்றை இடத்துக்கு இடம் எடுத்துச் செல்லுதல், விளை பொருள்களை சந்தைப்படுத்துதல் போன்ற அன்றாட வாழ்க்கை அம்சங்களில் எரிபொருள்கள் இன்றியமையாதவை.

மக்களின் அன்றாடப் பாவனைப் பொருள்களின் விலைவாசிகளை உயர்த்துவதில் மிகப் பிரதானமான பங்கு வகிப்பவை எரிபொருள்கள். அதே போன்று உற்பத்தித்துறையிலும் எரிபொருள் தட்டுப்பாடு பெரும் பாதிப்பை உண்டாக்க வல்லது. ஒட்டு மொத்தமாகப் பார்த்தால், ஒரு பிரதேசத்தின் அல்லது நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் மட்டுமன்றி, சமூக மேம்பாட்டுடனும் எரிபொருள்கள் பின்னிப் பிணைந்துள்ளன.

தமிழ் மக்கள் மீது உண்மையான அக்கறை இருந்தால், கடந்த நாலரை வருடங்களாக அவர்கள் அனுபவித்து வரும் கஷ்டங்கள் இன்னல்களுக்கு முடிவுகட்ட வேண்டும் என்ற விருப்பம் உண்மையாகவே அரசுக்கு உண்டெனின், எரிபொருள்கள் மீதான தடையைத் தொடரும் முடிவுக்கு வந்திருக்க மாட்டாது.

தமிழ் மக்கள் மீது அரசுக்கு அக்கறை இருக்குமானால் எரிபொருள்கள் மீதான தடையை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். தனது இப்போதைய உத்தேச முடிவை உடனடியாக மாற்ற வேண்டும்.

தமிழ் மக்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளையே உருப்படியாகச் செய்வதற்கு அரசுக்குப் பலம் இல்லையானால், —

சிக்கல் நிறைந்த இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான பலமும், வல்லமையும், துணிச்சலும், விருப்பமும் எப்படி வரப்போகிறது என்ற கேள்வி தமிழ் மக்கள் மத்தியில் எழுவது இயல்பே.

அந்த வினா அரசு மீது தமிழர் கொண்டுள்ள நம்பிக்கையை கேள்விக் குறியாக்கி சமாதான முயற்சிகளை ஆட்டம் காணச் செய்யும் ஆபத்து உண்டு. இதனை அரசு உணர்ந்து கொள்ள வேண்டும். உணருமா?

# எயர் லங்கா நிறுவனத்தை தனியாருக்கு விற்க முடிவு

கொழும்பு, ஜன. 17

மேலதிகச் செலவுகள், கமிஷன்கள், தரகு மோசடி ஆகியவை தொடர்பாக தொடர்ந்து சர்ச்சைக்கு உள்ளாகி வரும் எயர்லங்கா நிறுவனத்தை தனியார் மயப்படுத்தி விற்றுவிட அரசு முடிவு செய்திருக்கிறது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் உத்தரவின் பேரில் இத்தகைய நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாக ''த சண்டே ரைம்ஸ்'' பத்திரிகை தெரிவித்தது.

கடந்த புதனன்று அலரி மாளிகையில் நடைபெற்ற விசேட கூட்டம் ஒன்றில் வைத்து, எயர்லங்காவை தனியார் மயப்படுத்தும் திட்டம் ஒன்றைத் தயாரிக்கும்படி எயர் லங்கா தலைவர் சேபால ஆட்டிகலவுக்கு ஜனாதிபதி சந்திரிகா உத்தரவிட்டார்.

இந்த விடயத்தில் வேகமாகச் செயற்பட்டு உருப்படியான நடவடிக்கைகளை எடுக்கும்படி, மேற்படி கூட்டத்தில் சமுகம் தந்திருந்த சுற்றுலா, விமானப்போக்குவரத்துத்துறை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்காவையும் ஏனைய அமைச்சர்களையும் ஜனாதிபதி பணித்தார்.

எயர் லங்காவின் மூலதனப் பங்குகளை விற்பது குறித்தும், கொழும்பு பங்குச் சந்தையில் அப்பங்குகளை விற்பனைக்கு விடலாமா என்பது குறித்தும் ஆராயும்படியும் அவர் உத்தரவிட்டார்.

உல்லாசப் பயணத் துறையை அபிவிருத்தி செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாதது குறித்தும் ஜனாதிபதி விசனம் தெரிவித்தார். (உ)

# தடுத்து வைக்கப்பட்டுள்ள பொலீஸார் மீண்டும் உண்ணாவிரதம் இருப்பர்

கொழும்பு, ஜன. 17

யாழ்ப்பாணத்தில் விடுதலைப்புலிகளினால் தடுத்து வைக்கப் பட்டிருக்கும் பொலீஸாரும்ராணுவ சிப்பாய் ஒருவரும் அடுத்த மாதம் 20ஆம் திகதி உண்ணா விரதம் ஆரம்பிக்கப் போவதாக 'ஐலண்ட்' திவயின'' பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

தம்மை விடுதலை செய்யக் கோரியே இவர்கள் உண்ணா விரதம் இருக்கப் போவதாக அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் கைதிகளாக 15 பொலீஸாரும் ஒரு ராணுவச் சிப்பாயும் இன்னும் இருந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கும் அரச தரப்புக்கும் இடையிலான இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தையின் போது நான்கு பொலீஸ்காரர் விடுவிக்கப்பட்டதும்—

மூன்றாம் கட்ட பேச்சுவார்த்தையின் போது எவரும் விடுதலையாகாததும் குறிப்பிடத்தக்கது. [இ]

# சமஷ்டி அரசமைப்பு இல்லையெனில் இலங்கையில் சமாதானம் இல்லை!

## அமெரிக்க ஈழத் தமிழ்ச் சங்கம் அறிக்கை

நியுயோர்க், ஜன. 17

''இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக கடந்த காலத்தில் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தங்கள் அனைத்துமே முறிவடைந்தன. ஒரு சமஷ்டி அரசமைப்பை ஏற்படுத்துவதன் மூலம் மட்டுமே தமிழர்களின் உரிமையை உறுதிப்படுத்த முடியும்''

—இவ்வாறு அமெரிக்க ஈழத் தமிழ்ச் சங்கம் வெளியிட்ட ஓர் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

''சமஷ்டி அரசமைப்பு இல்லையெனில் சமாதானம் இல்லை'' என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அரசாங்கத்துக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே இரண்டு வாரத்துக்கான யுத்த நிறுத்த உடன்பாடு ஒன்று ஏற்பட்டுள்ளதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

முதலில் ஒரு சமஷ்டி அரசியலமைப்பை வழங்கி அதன் பின்னர் அது தொடர்பான விடயங்களை பேச வேண்டும்.

கடந்த தசாப்த காலத்தைய பண்டாரநாயக்க–செல்வநாயகம் ஒப்பந்தம் போன்ற துண்டு துண்டான ஒப்பந்தம்போன்றதவறுகளை நாம் மீண்டும் செய்யக் கூடாது. சமாதானத்தை அடைவதற்கான ஆணையை மக்கள் ஜனாதிபதிக்கு வழங்கியுள்ளார்கள். ஜனாதிபதி இந்தச் சந்தர்ப்பத்தை வீணாக்கக் கூடாது.

தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டால், சிங்கள பிரச்சினை ஆரம்பமாகும் என்பதை நாம்நினைவிற் கொள்ள வேண்டும். மேல்நாட்டுச் சிங்களவர்களும் கரையோரச் சிங்களவர்களும் மற்றவர்கள் தம்மை ஆட்சி செய்வதை விரும்பமாட்டார்கள். ஒரு சமஷ்டி அரசியலமைப்பு மட்டுமே இனப்பிரச்சினைக்கு முன் கூட்டியே ஒரு தீர்வைக் கொடுக்கக் கூடியதாக அமையும் சகல சமஷ்டி அரசுகளும் தம்மைத் தாமே ஆட்சி செய்யக் கூடிய அதிகாரத்தைக் கொண்டவையாக இருக்கும்.

கடந்தகால உடன்படிக்கைகள் அனைத்தும் முறிவடைந்துள்ளமையினால், ஒரு சமஷ்டி அரசியலமைப்பை ஏற்படுத்துவதன் மூலமாக மட்டுமே தமிழர்கள் தம்முடைய உரிமைகளை நிலைநாட்ட முடியும்.

சமாதானம் ஏற்படுத்தப்படும்போது, ஈழத் தமிழ்ச் சங்கம், சகல சமஷ்டி அரசுகளையும் அபிவிருத்தி செய்வதற்கான பணத்தைச் சேகரிப்பதில் அமெரிக்க அரசையும் ஏனைய நாடுகளையும் சர்வதேச அமைப்புக்களையும் கோருவதற்கான பிரசாரங்களை மேற்கொள்ளும்'' — என்று உள்ளது. (ஐ)

# புதிய அரசமைப்பைத் தயாரிப்பதில் நீலன் திருச்செல்வம் முக்கியபங்கு

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசிற்காக உத்தேச—புதிய — அரசமைப்பைத் தயாரிக்கும் செயற்பாட்டில் பின்னணியிலிருந்து முக்கியமாகச் செயற்பட்டு வருகிறார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேசியப் பட்டியல் எம்.பியான கலாநிதி நீலன் திருச்செல்வம்.

கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று இது குறித்து தகவல் வெளியிட்டிருக்கிறது.

அவரது ''இனங்கள் பற்றி ஆராயும் கல்வி நிறுவனம்'' ஏற்கனவே ''சமஷ்டி'' அடிப்படையிலான ஆவணம் ஒன்றைத் தயாரித்திருப்பதாகவும் —

அது முக்கிய இடங்களுக்கு விநியோகிக்கப்பட்டிருப்பதாகவும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்தது.

கடந்த 9ஆம் திகதி பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசில் இடம் பெற்றுள்ள கட்சிகளின் தலைவர்கள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் கூடி புதிய அரசமைப்பை ஏற்படுத்துவது குறித்து ஆராய்ந்தனர்.

இக்கூட்டத்தில் அமைச்சர் தர்மசிறி சேனநாயக்க, ஸ்ரீ ல. சு. கவின் செயலாளரான அமைச்சர் டி. எம். ஜயரத்ன, லங்கா சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த பற்றி வீரக்கோன், அத்தாவுட செனிவிரத்ன, பேர்னாட் சொய்ஸா, ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியைச்சேர்ந்த ரவி கருணநாயக்கா, லால் குணசேகரா, ஸ்ரீலங்கா மக்கள் கட்சியைச் சேர்ந்த பி. கலனசூரிய, பி. பொடி மாத்தையா, வை. பி. டிசில்வா, எம். ஜஸீத், கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த கே. பி. சில்வா ஆகியோர் பங்குபற்றினர்.

பரந்த அளவிலான அதிகாரப் பரவலாக்கலை தாம் விரும்புவதாக ஜனாதிபதி சந்திரிகா அந்தக் கூட்டத்தில் தெரிவித்தார்.

சமஷ்டி முறையை ஜனாதிபதி குறிப்பிடுகின்றாரா என விஞ்ஞானத்துறை விவகார அமைச்சர் பேர்னாட் சொய்ஸா கேட்டார்.

தாம் சமஷ்டி எனக் குறிப்பிட விரும்பவில்லை என்று கூறிய ஜனாதிபதி சந்திரிகா ஆனால் தாம் எதிர்பார்ப்பது அந்த எல்லை வரை செல்லும் என்றார்.

''சமஷ்டி'' என்ற சொல் பிரிவினை என்ற எண்ணத்தை மக்கள் மனத்தில் ஏற்படுத்தக் கூடும் என்பதால், ''சமஷ்டி'' என்ற சொல்லை தமது திட்டத்துக்குப் பயன்படுத்துவதில்லை என கட்சித் தலைவர்கள் அக்கூட்டத்தில் முடிவு செய்தனர்.

அரசமைப்பு மாற்றம் குறித்து ஆராய்வதற்காக எதிர்வரும் 19 ஆம் திகதி (நாளை மறுதினம்) நாடாளுமன்றக் கூட்டத்தில் வைத்து நீதி அமைச்சர் ஜி எல். பீரிஸுடன் —இயலுமானால் கலாநிதி நீலன் திருச்செல்வத்துடன் சேர்த்து — சந்திப்பது என அக்கூட்டத்தில் கட்சித் தலைவர்கள் முடிவு செய்தனர். (உ)

## தேசிய அடையாள அட்டை வழங்க பாடசாலை அதிபர்களே உறுதி செய்யும் அதிகாரிகள்

யாழ்ப்பாணம், ஜன. 17

மாணவர்களுக்கு தேசிய அடையாள அட்டைகளை விரைவாக விநியோகிப்பதற்கு வசதியாக —

நாட்டில் உள்ள அனைத்து பாடசாலை அதிபர்களையும் உறுதிப்படுத்தும் அதிகாரிகளாக அரசு நியமித்திருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

உறுதிப்படுத்தும் அதிகாரிகள் என்ற வகையில் பாடசாலை அதிபர்கள் தத்தமது பாடசாலை மாணவர்களின் தேசிய அடையாள அட்டைகளுக்கான விண்ணப்பப் படிவங்களை சேகரிக்கவும், அவற்றை ஒன்றுசேர்த்து, ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளருக்கு அனுப்பவும் அதிகாரம் அளிக்கபபட்டிருப்பதாகவும் —

அதிபர்கள் அனுப்பும் விண்ணப்பப் படிவங்களை [illegible] பத்து நாட்களுக்குள் அடையாள அட்டைகள் மாணவருக்கு வழங்கப்பட்டு விடும் என்றும் —

ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் திரு. குணசேன இமதுவ தெரிவித்தார்.

கடந்த வருடம் 73 ஆயிரத்து 834 தேசிய அடையாள அட்டைகள் மாணவர்களுக்கு விநியோகிக்கப்பட்டன. தேசிய அடையாள அட்டைக்காக ஒரு பாடசாலை மாணவன் மூன்று ரூபா மட்டுமே செலுத்த வேண்டியிருக்கும் என்றார் அவர்.

பாடசாலைகளுக்கு நேரடியாகச் சென்று மாணவர்களுக்கு அடையாள அட்டைகளை விநியோகிப்பதற்கு வசதியாக ''ஆட்பதிவுத் திணைக்களத்தின் நடமாடும் அலுவலகச் சேவையும்'' இடம்பெற [illegible] என்றும் [illegible] அடைசொன்னார். (உ)

## ரணில் தம்பதியர் சந்திரிகாவுக்கும் அழைப்பு

கொழும்பு, ஜன. 17

கடந்த புதனன்று திருமணம் செய்து கொண்ட எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் மைத்திரி விக்கிரமசிங்கவும் மனை புகும் நிகழ்ச்சி இன்று மாலை நடைபெறவிருக்கிறது.

அந்நிகழ்ச்சியிலும் அதன் பின்னர் இடம்பெறும் இரவு விருந்திலும் கலந்து கொள்ளும் படி ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் மற்றும் அவரது அமைச்சரவை உறுப்பினர்கள் அனைவருக்கும் அழைப்பிதழ் அனுப்பப் பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## பாப்பரசரின் நீண்ட பயணம்

வத்திக்கான், ஜன. 17

பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் தற்போது ஆரம்பித்துள்ள நான்கு நாடுகளுக்கான பயணம் அவரது பதவிக் காலத்தில் இடம்பெறும் நீண்ட பயணமாகும் என்று தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் 1978 இல் பாப்பரசராக பதவியேற்ற பின்னர் இத்தாலிக்கு வெளியே அவர் மேற்கொள்ளும் 63 ஆவது பயணம் இது என்றும் தெரிவிக்கப்பட்டது. (க-ஐ-6)

# வாரத்தில் 4 நாள்கள் இரவு பகல் படகுச்சேவை

யாழ்ப்பாணம், ஜன. 17

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று முதல் வாரத்தில் நான்கு நாள்கள் பகலிலும் இரவு வேளையிலும் நடைபெறவுள்ளது.

வாரத்தில் செவ்வாய், புதன், வெள்ளி, சனி ஆகிய நான்கு நாள்களும் காலை 8 மணி முதல் 10 மணி வரையும் பின்னர் மாலை 4 மணி முதல் இரவு 8 மணி வரையும் படகுச் சேவை இடம்பெறும்.

இத் தினங்களில் படகுச் சேவை நடைபெறாத பட்சத்தில் அது பற்றி முன் கூட்டியே அறிவிக்கப்படும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

இதே வேளை —

நாளை புதன்கிழமை பாப்பரசரைத் தரிசிக்கச் செல்வோருக்கான விசேட படகுச் சேவை காலை 8 மணி முதல் நடைபெற இருப்பதால் வழமையான படகுச் சேவை நாளை நடைபெற மாட்டாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## கிளாலி இறங்குதுறையில் பயணியின் பணம் திருடிய படகோட்டிக்கு அபராதம்!

கிளாலி இறங்குதுறையில் பயணி ஒருவரின் பணத்தைத் திருடிய படகோட்டி ஒருவருக்கு சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றில் சிறைத்தண்டனையும் அபராதமும் விதிக்கப்பட்டது

இதுபற்றி அறிவிக்கப்படுவதாவது;

பருத்தித்துறையைச் சேர்ந்த பயணி ஒருவரின் 65,000 ரூபாவை மானிப்பாய் வடக்கைச் சேர்ந்த படகோட்டி ஒருவர் குற்றமுறக் கையாடல் செய்தார்.

அவர் சாவகச்சேரி காவல் பணிமனையால் கைது செய்யப்பட்டு சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தப் பட்டார்.

குற்றத்தை ஒப்புக் கொண்ட அவரிடமிருந்து ரூபா 59,000 பணம் மீட்கப்பட்டது.

மிகுதி 6,000 ரூபாவை செலுத்த வேண்டும் என்றும், 2மாதச் சிறைத்தண்டனையை அனுபவிக்க வேண்டும் என்றும் குற்றப்பணமாக ரூபா 5,000செலுத்த வேண்டும் என்றும், தவறின் 140நாட்கள் கட்டாய சமூக சேவை செய்ய வேண்டும் என்றும் நீதியாளர் சுடரால் தீர்ப்பளிக்கப்பட்டது. (க)

# பண்டா-செல்வா ஒப்பந்த...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

றார்கள்.

பேச்சு குறித்தும், எமது நிலைப்பாடு குறித்தும், அரசின் நிலைப்பாடு குறித்தும் இன்றுவிளக்க விரும்புகிறேன். மூன்று சுற்றுப் பேச்சுக்கள் முடிவடைந்துவிட்டன. ஆனால் உருப்படியாக எதையும் காணவில்லை. அரசு வாக்குறுதிகளை அளித்துக் கொண்டிருக்கிறது. அன்றாடப் பிரச்சினை என்றும் அடிப்படைப் பிரச்சினை என்றும்சிக்கல்கள்உள்ளன;பாதை திறப்பதில் சிக்கல்கள் இருக்கின்றன.

ஆரம்பத்தில் பேச்சுக்கள் தொடங்கிய போது பேச்சுக்களை இரண்டு கட்டங்களில் —இரண்டு பரிமாணங்களில்— நடத்தவேண்டும் என நாம் வேண்டிக்கொண்டோம்.

மக்கள் எதிர்கொள்ளும் அத்தியாவசியப் பிரச்சினைகள் —அன்றாடப் பிரச்சினைகளுக்கு முதலில் தீர்வுகாண வேண்டும். அடுத்த கட்டமாக அடிப்படையான இனப்பிரச்சினை குறித்து ஆராய்ந்து தீர்வுகாண வேண்டும் என நாம் கூறினோம்.

முதல் தடவையாக எங்களுடன் பேச்சு நடத்த வந்த அரச தூதுக்குழு ஒரு நிகழ்ச்சி நிரலைத் தந்தது.

அந்த நிகழ்ச்சி நிரலிலும் தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பது பற்றியும் அவற்றைத் தீர்ப்பதற்கு அரசு உடன் நடவடிக்கை எடுக்கும் என்றும் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

முதற்கட்டப் பேச்சுக்களின் போது தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் என்னவென்பதை நாம் அவர்களுக்கு விளக்கினோம்.

### நாம் கூறியவை

முதலில் போர் நிறுத்தம் வர வேண்டும்; அதனைத் தொடர்ந்து இயல்பு நிலை—சமாதானம் தோன்ற வேண்டும்

அடுத்ததாக எமது மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடை நீக்கப்பட வேண்டும்.

மூன்றாவதாக வடக்கிற்கான பாதுகாப்பான பாதை திறக்கப்படவேண்டும்.

அடுத்ததாக கடல்வலயத் தடை நீக்கப்படவேண்டும்.

அதைத் தொடர்ந்து அகதிகளாக இடம் பெயர்ந்திருக்கும் எமது மக்கள் குடியமர வழிசெய்யவேண்டும்

— இவற்றையே தெளிவாகக் குறிப்பிட்டு, இவையே மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் என அரசுக்குக் குறித்துக் காட்டினோம்.

ஆரம்பத்தில் இந்த அன்றாடப் பிரச்சினைகளின் பரிமாணங்கள் அவர்களுக்கு புரிந்ததோ புரியவில்லையோ தெரியவில்லை. ஆனால் அவற்றைத் தீர்ப்பதாக அவர்கள் வாக்குறுதியளித்தனர்.

ஆனால் கொழும்புக்குத் திரும்பிச் சென்று இப்பிரச்சினைகளை ஆராய்ந்த போது அவர்களுக்கு ஒரு விடயம் விளங்கியது.

அன்றாடப் பிரச்சினைகள் என விடுதலைப் புலிகள் குறிப்பிட்டுக் காட்டிய அனைத்துப் பிரச்சினைகளும் இராணுவ நிலைப்பாட்டுடன் தொடர்புபட்டது என்பது அப்போதுதான் அவர்களுக்குப் புரிந்தது.

பொருளாதாரத் தடையை நீக்குவதானால் இராணுவம் எதிர்ப்புக் காட்டும்; பாதையைத் திறப்பதானால் இராணுவம் அந்த நிலைகளிலிருந்து விலக வேண்டும்: போர் நிறுத்தம் செய்வதானால் இராணுவம் அதற்கு இணக்கம் தெரிவிக்க வேண்டும்; அகதிகளை மீளக் குடியேற்றுவதனாலும் இராணுவம் தான பிடித்து வைத்துள்ள குடியேற்றப் பிரதேசங்களிலிருந்து விலக வேண்டும்.

இப்படி ஒவ்வொரு பிரச்சினையிலும் இராணுவம் சம்பந்தப்பட்டுள்ளது என்பதை அவர்கள் கண்டுகொண்டனர்.

ஆனால் இந்த அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இராணுவம் எதிர்ப்புத் தெரிவித்தது.

''புலிகளை நம்ப வேண்டாம்; இந்தப் பேச்சுக்களில் புலிகளுக்கு விட்டுக் கொடுக்க வேண்டாம்; இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது'' — என்ற ரீதியில் அரசுக்கு அழுத்தத்தைப் போட்டது இராணுவம்.

அதனால் அரசுக்கு சிக்கல் ஏற்பட்டது. இராணுவத்தின் ஒத்துழைப்பு — அனுசரணை — இல்லாமல் இந்தப் பிரச்சினையைத் தீர்க்கமுடியாது என்பதை அரசு உணர்ந்து கொண்டது.

### அரசு எழுதிய கடிதம்

அதனால் அரசு தலைவர் பிரபாகரனுக்கு கடிதம் எழுதியது.

போர் நிறுத்தம் செய்வோம்; போர் நிறுத்தம் செய்ததுடன் இனப்பிரச்சினையைப்பற்றிப் பேசுவோம் எனக் கடிதத்தில் அரசு கூறியது.

ஆனால் அப்படிச் செய்ய முடியாது என நாம் மறுத்தோம். இருதரப்பும் போர் நிறுத்தம் செய்வோம். போர்நிறுத்தம் செய்ததும் நீங்கள் வாக்குறுதி அளித்தபடி — நீங்கள் நிகழ்சி நிரலில் குறிப்பிட்டபடி — தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை பேசித்தீர்த்த பின்னர் அடுத்த கட்டமாக இனப் பிரச்சினையைத் தீர்ப்பது குறித்துப் பேசுவோம் என்று வலியுறுத்தி தலைவர் கடிதம் அனுப்பினார்.

இப்படி மாறிமாறி கடிதப் போக்குவரத்துடன் இனப் பிரச்சினை இழுபட்டது. ஆனால் தலைவர் மிக உறுதியாக இருந்தார்.

நாளாந்தம் எமது மக்கள் அவலத்துடன் எதிர் கொள்ளும் அன்றாடப் பிரச்சினைகளை அப்படியே வைத்துவிட்டு —

இனப்பிரச்சினை என்று பேச்சு நடத்த முடியாது எனத் தலைவர் வலியுறுத்தினார்.

இனப்பிரச்சினை என்று பேச முயன்றால் அது எவ்வளவு காலம் செல்லும் என்பது தெரியாது; அவர்கள் என்ன கொடுக்கப் போகிறார்களோ தெரியாது; அப்படியிருக்க இனப்பிரச்சினை சிக்கல் பற்றி பேச முன்னர் — எமது மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும்; உண்மையான சமாதான சூழ்நிலை உருவாக வேண்டும் என தலைவர் வலியுறுத்தினார். தலைவர் அதில் உறுதியாக நின்றதால் மீண்டும் பேச்சு நடத்த அவர்கள் திரும்பி வந்தார்கள்; இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைகளில் அன்றாடப் பிரச்சினைகள் பற்றி தொடர்ந்து பேசப் பட்டது.

### போர் நிறுத்தம் வந்தது

தலைவர் பிரபாகரனும் ஜனாதிபதி சந்திரிகாவும் ஒப்பமிட்ட உடன்படிக்கை மூலம் போர் நிறுத்தம் வந்தது.

யுத்த நிறுத்தத்தை எப்படிக் கடைப்பிடிப்பது என்பது பற்றிய வழிமுறை இதில் உள்ளது.

இராணுவமும் புலிகளும் மாறி மாறித் தாக்குதலில் ஈடுபடக் கூடாது; இருதரப்பும் முகாம்களில் எவ்வளவு தூரத்திற்கு விலகி நிற்க வேண்டும்? — என்பவை போன்ற விடயங்கள் இந்த வழிமுறைகளில் தெளிவாகக் குறிப்பிடப் பட்டிருந்தன.

### கடற்தொழில் பிரச்சினை

கடல் பிரதேசத்தில் சுதந்திரமாக நடமாடி —

சட்டபூர்வமான முறையில் மீன் பிடிப்பதற்கு இந்த உடன்பாட்டில் அனுமதி கொடுக்கப் பட்டிருந்தது.

ஆனால் இந்த ஒப்பந்தம் கைச்சாத்தான பின்னர் — நாம் சமாதானத்தைப் பிரகடனப் படுத்திய பின்னர் — யுத்த நிறுத்தம் வந்த பின்னர் — அரசு ஓர் அறிவித்தலை விடுத்தது.

அதில் கடல் பிரதேசத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதிகளில் மட்டுமே மீன்பிடிக்க முடியும், பகலில் மட்டுமே கடற்தொழில் செய்ய முடியும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

எமது போராளிகள் கிழக்கு மாகாணத்தில் ஆயுதங்களுடன் நடமாட முடியாது என்றும் அறிவிக்கப்பட்டது.

இப்படியான சில விதிமுறைகள் அரசால் விதிக்கப்பட்டன. இதற்கு நாம் கடுமையான ஆட்சேபம் தெரிவித்தோம்.

இப்போது மூன்றாம் கட்டப் பேச்சுக்கு அவர்கள் வந்த போது இதனை அவர்களுக்கு விளங்கப்படுத்தினோம்.

இருதரப்பும் இணங்கி ஓர் ஒப்பந்தத்தைச் செய்த பின்னர், நீங்கள் ஒரு தலைப்பட்டமாக ஒரு பிரகடனத்தைக் செய்வது போர் நிறுத்த மீறலாகக் கருதப்படும்; அது நியாமானதல்ல என்று அவர்களிடம் கூறினோம்.

பகலில் எமது மக்கள் மீன் பிடித்து இரவில் சந்தை நடத்த முடியாது எனவே இரவிலும் மீன்பிடிக்க அனுமதிக்க வேண்டும் என வலியுறுத்தினோம்.

### பொருளாதாரத் தடை

பொருளாதாரத் தடையைத் தளர்த்தியதாக அரசு கூறினாலும் தடைதளர்த்தப்பட்ட பொருள்களை இங்கு எடுத்து வருவதில் பல கட்டுப்பாடுகள்; கஷ்டங்கள்; பிரச்சினைகள். இராணுவம் சில பொருள்களை விடும்; சில பொருள்களை அனுமதிக்காது; பொருள்களை ஏற்றிவரும் லொறிகளை நீண்ட நாள்களுக்குத் தடுத்துவைத்திருக்கும். இப்படி பல நெருக்குதல்

(8ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## ஏரம்பு சோதிலிங்கம்

[மண்டைதீவு]

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் தற்போது மில் லேன், பிரம்படி, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட ஏரம்பு சோதிலிங்கம் 15-1-95 ஞாயிற்றுக் கிழமை அகால மரணமானார்.

அன்னார் மங்கையர்க்கரசியின் அன்புக் கணவரும், இலட்சுமிகாந்தன் [ஆசிரியர் அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம்), சுந்தரலிங்கம் (கிராம அலுவலர் அல்லைப்பிட்டி, மண்டைதீவு), பஞ்சலிங்கம் ஆகியோரின் அன்புத் தந்தையும், தனரஞ்சுகமணி (ஆசிரியை ஆனைக்கோட்டை றோ. க. பாடசாலை), பகீரதி [ஆசிரியை கொக்குவில் ஸ்ரீஞான பண்டித வித்தியாசாலை] ஆகியோரின் அன்பு மாமனாரும், டினேஸ் ஸாந், டிலக்ஷனா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை, கார்த்திகேசு, பெரியநாயகி, திருநாவுக்கரசு, காலஞ்சென்ற சிதம்பரநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று [17-1-95] பி. ப. 2.00 மணிக்கு தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
S. சுந்தரலிங்கம்
கிராம அலுவலர்
மண்டைதீவு
[அல்லைப்பிட்டி]

மில் லேன்,
பிரம்படி,
கொக்குவில். (34746)

## வல்லிபுரம் பொன்னுத்துரை

சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் வழக்கம் பரையை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் பொன்னுத்துரை நேற்று இயற்கை எய்தி விட்டார். இவர் காலஞ் சென்றவர்களான, வல்லிபுரம் தங்கமுத்து தம்பதிகளின் ஏக புதல்வரும். மகேஸ்வரியின் அன்புக் கணவரும், புஸ்பராணி, கிருபாகரன் (இ.மி.ச. வட்டுக்கோட்டை), காலஞ்சென்ற செல்வராணி ஆகியோரின் அன்புத் தந்தையும், குலசேகரம்பிள்ளை (பாறெயின்), கிருஷ்ணலீல ஆகியோரின் அன்பு மாமனாரும், மீரா, அனுஷா, கீதவாணி ஆகியோரின் அன்புப் பேரனாரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் வழக்கம்பரையில் அவரது இல்லத்தில் இன்று காலை 9-00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வழுக்கையாறு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்
பொ. கிருபாகரன்
(மகன்)

வழக்கம்பரை
சுழிபுரம். (34748)

## கந்தையா மயில்வாகனம் B.sc.

[இளைப்பாறிய ஆசிரியர், வேலணை மத்திய மகா வித்தியாலயம்]

புங்குடுதீவு 12 ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், புளியங்கூடலை வசிப்பிடமாகக் கொண்டவருமான கந்தையா மயில்வாகனம் அவர்கள் 11-01-95 அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் புங்குடுதீவு குறிகாட்டுவானைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான நாகப்பர் கந்தையா, இராமாசிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், சரஸ்மலரின் (கனடா), அன்புக் கணவரும், கனடாவில் வசிப்பவர்களான மதிவதனி, சந்திரவதனி, சந்திரநேசன், மங்களவதனி, குகநேசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவயோகலிங்கத்தின் (கனடா) மாமனாரும், கிரிசாந்தின் (கனடா) அன்புப் பேரனும், வினாசித்தம்பி, நல்லதம்பி (ஜேர்மனி), நாகரத்தினம் (ஜேர்மனி), கதிரவேலு (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற செல்லையா (பிரபல வர்த்தகர், களுத்துறை), செல்லம்மா ஆகியோரின் மருமகனும், மகேந்திரராஜா (பிரான்ஸ்), திருச்செல்வம் (விரிவுரையாளர், பேராதனை பல்கலைக்கழகம்), சோமசேகரராஜா (கனடா), சற்குணநவராஜா [ஜேர்மனி], காலஞ்சென்ற பேரின்பராஜா, சண்முகராஜா [கனடா] ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15-01-95 அன்று கனடா, ரொறண்டோ நகரில் நடைபெற்றன.

இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
K. கண்ணன்
[பெறாமகன்]

ஆஸ்பத்திரி முன் ஒழுங்கை,
[சிங்கம் ஸ்ரோர்ஸ் அருகில்,]
இணுவில் மேற்கு. (34749)

## B. E. சபாரத்தினம்

கரம்பனைப் பிறப்பிடமாகவும், கண்டிக்குளியைப் வாழ்விடமாகவும் கொண்ட திரு B. E. சபாரத்தினம் அவர்கள் 16-1-1995 இல் இறைவனடி சேர்ந்தார்.

இவர் திருமதி றோஸ் சபாரத்தினத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பெனடிக்ற் - றோசலின் தம்பதிகளின் அருமை மகனும், காலஞ்சென்ற சாள்ஸ் அக்னேஸ் தம்பதிகளின் அன்பு மருமகனும், றஞ்சினி செல்வராசா [இந்தியா], ராகினி தேவராசா [கனடா], தர்மினி தில்லைநாதன் [ஜேர்மனி], நந்தினி சபாரத்தினம் [கனடா], கவிஸ்ரா சபாரத்தினம் [ஆசிரியை ஆனைப்பந்தி மெதடிஸ் மிசன்) ஆகியோரின் பாசம் நிறைந்த அப்பாவும், செல்வராசா, தேவராசா, தில்லைநாதன் ஆகியோரின் அருமை மாமனும், பிரயான் (புனிதபத்திரிசியார் கல்லூரி), சாமினா பிரியாந்தி (திருக்குடும்ப கன்னியர் ஆங்கில பாடசாலை], தினேஸ், நிரேஸ் [ஜேர்மனி], சில்வினி [கனடா] ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 17-01-1995 பி. ப. 3. 30 மணிக்கு அவரின் இலலத்திலிருந்து நல்லடக்கத்துக்காக கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
றோஸ் சபாரத்தினம்
(மனைவி)

186, கண்டி வீதி,
யாழ்ப்பாணம் [34744]

# பண்டா-செல்வா ஒப்பந்த அடிப்படையிலான...

[7 ஆம் பக்கத் தொடர்ச்சி]

களை இராணுவம் போட்டு வந்தது.

எமது மக்களின் அன்றாட வாழ்க்கைகுத் தேவையான பல பொருள்கள் இன்னும் தடை செய்யப்பட்டே உள்ளன.

உதாரணத்துக்கு ஒன்று — யாழ்ப்பாணத்தில் கைத்தொழில் துறையைக் கட்டி எழுப்பவோ, விவசாயத்தை பெரிய அளவில் மேற்கொள்ளவோ, மீன்பிடித் தொழிலை விரிவுபடுத்தவோ, போக்குவரத்துக்கோ எரிபொருள் தேவை.

எரிபொருளை — உரத்தை — வாகனங்களை — வாகன உதிரிப்பாகங்களைத் தடுத்து வைத்துக் கொண்டு இங்கு வந்து உங்கள் பகுதியின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யப் போகின்றோம் என்று கூறுவதில் அர்த்தமில்லை.

ஆகவே பொருளாதாரத் தடை முற்றாக நீக்கப்பட்டு எந்தத் தடையுமின்றி அத்தியாவசியப் பொருள்கள் இங்கு வரவேண்டும் என நாம் வலியுறுத்தினோம்.

தென்னிலங்கையில் சிங்கள மக்களுக்கு என்னென்ன பொருள்கள் என்னென்ன விலையில் கிடைக்கின்றதோ அதே பொருள்கள் அதே விலையில் இங்குள்ள மக்களுக்கு கிடைப்பதற்குரிய வாய்ப்பை வழங்க வேண்டும் என்றோம்.

அப்படிச் செய்தால்தான் தமிழ் மக்கள் உங்கள் மீது நம்பிக்கைவைப்பார்கள் என்று நாம் கூறினோம்.

தாங்கள் போய் சந்திரிகா அம்மையாருடன் கதைத்து— இந்தப் பொருளாதாரத் தடையை நீக்குவதாக வாக்குறுதி கொதுத்துவிட்டு அவர்கள் போயுள்ளனர். சரி என்ன செயயப் போகிறார்கள் என்பதைப் பார்ப்போம்.

### பாதையைத் திறத்தல்

யாழ்ப்பாண மக்கள் சதா எதிர்பார்த்து நிற்கும் பிரச்சினை இந்தப் போக்குவரத்துக் சிக்கல்தான்.

கிளாலியூடாகச் செல்வதால் மக்கள் படும் கஷ்டம் அரசுக்குத் தெரியும். ஆகவே ஒரு பாதையைத் திறந்து விடுங்கள் என நாம் கேட்டோம்.

இந்தப் பிரச்சினையில்தான் இன்று பேச்சுவார்த்தை சிக்குப்பட்டுப்போய் உள்ளது.

யாழ். குடாநாட்டை வன்னியுடன் இணைக்கும் இரண்டு பிரதான பாதைகளில் இராணுவம் வந்து தரித்து நிற்கிறது. முன்னர் நாம் பயன்படுத்திய ஊரியானையும் தடுத்து வெற்றிலைக் கேணி வரை ஒரு வேலி போட்டு நிற்கின்றது இராணுவம்.

அதாவது யாழ்ப்பாணத்தின் கழுத்தைச் சுற்றி ஒரு முள்ளுவேலி போட்ட மாதிரி இந்தப் பாதை இரண்டையும் மறித்து முற்றுகை போட்டு இராணுவம் நிலைகொண்டுள்ளது.

நாம் பூநகரிப் பாதையைத் திறக்கும்படி கோருகின்றோம். ஏன் ஆனையிறவுப் பாதையைத் திறக்கக் கோரவில்லை?

ஆனையிறவில் சிங்கள இராணுவம் கடந்த 30 ஆண்டுகளாகத் தரித்து நிற்கின்றது. அவர்களைப் பொறுத்தவரை அது ஒரு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நிலையம். அந்த இடத்திலிருந்து இலகுவில் அவர்கள் விட்டுவிட்டுப் போக மாட்டார்கள்.

ஆனால் பூநகரிக்கு இராணுவம் வந்து தரித்து 3 ஆண்டுகள்தான். அது நீண்டகாலமாகவே நமது மக்கள் பயன்படுத்தி வந்த பாதை அதனால் இந்தப் பாதையைத் திறந்து அதில் உள்ள இராணுவ முகாமை அகற்றுங்கள் என நாம் கோருகின்றோம்.

### சுற்றி வளைப்பு ஏன்

யாழ். குடாநாடு மீது ஒரு பாரிய தாக்குதல் ஒன்றை நடத்துவதற்காகத்தான் ஆனையிறவிலும், வெற்றிலைக் கேணியிலும், பூநகரியிலும், பலாலியிலும், தீவுப் பகுதியிலும் சுற்றிவளைத்து இராணுவம் நிற்கின்றது. யாழ். குடாநாட்டைச் சூழ முக்கிய நிலைகளில் இராணுவம் நிற்கின்றது.

இந்த ஐந்து முனைகளில் இருந்தும் குடாநாட்டின் மீது பெரிய படையெடுப்பை நடத்தும் திட்டத்தை அவர்கள் நீண்டகாலமாக வைத்திருக்கின்றார்கள்.

இந்தப் படையெடுப்பு நடக்கவிருந்தது. அரசாங்க மாற்றம், சந்திரிகாவின் சமாதானப் பேச்சு என்பவை வந்ததால் அதனை ஒத்திப் போட்டுள்ளனர்.

இந்தப் பேச்சுவார்த்தை குழம்பினால் இந்த ஐந்து முனைகளில் இருந்து யாழ்ப்பாணத்துக்குள் ஊடுருவ வேண்டும் என்ற திட்டத்தை இராணுவம் வைத்துள்ளது.

அதனால்தான் நாம் பூநகரி முகாமிலிருந்து வெளியேறி பாதையைத் திறக்கும்படி கோருகின்றோம்.

யாழ். குடாநாடு மீது ஒரு முற்றுகையை — தாக்குதலை — நடத்தி, பெரிய அளவில் ஓர் அழிவை ஏற்படுத்தும் நோக்கம் இல்லை; உண்மையான சமாதானம் தான் அவர்களின் நோக்கமாக இருந்தால், இந்தப் பாதையில் உள்ள இராணுவ முகாமை அகற்றி பாதையைத் திறப்பதன்மூலம் அதனை வெளிப்படுத்தும்படி நாம் கோருகின்றோம்.

ஆனால் பூநகரியிலிருந்து சுமார் அரை மைல் தூரத்துக்கு விலகி நிற்கின்றோம் என்று அவர்கள் கூறுகின்றனர்.

நாம் அதனை ஏற்கவில்லை; ஏற்கமுடியாது.

மூன்றாம் கட்டப் பேச்சில் இந்த பாதை விடயம் தான் முக்கியமானதாக இருந்தது. நாம் பல விளக்கங்களைக் கொடுத்தோம்.

சமாதானம் ஏற்பட்டால் வடக்கு — கிழக்கில் இருக்கும் அனைத்து இராணுவ முகாம்களையும் வாபஸ் பெறுவதாக நீங்கள் கூறுகின்றீர்கள். கிழக்கில் மட்டும் இருநூறு இராணுவ முகாம்களை வைத்துள்ளீர்கள். இவ்வளவு இராணுவ முகாம்களை வாபஸ் பெறுவதாகக் கூறும் நீங்கள் இப்போது ஒன்றையாவது வாபஸ் பெற்றுக் காட்டுங்களேன் என்று நாம் கூறினோம்; அப்படிச் செய்தால் எங்களுக்கும் — எமது மக்களுக்கும் — நம்பிக்கை பிறக்கும் என்று சொன்னோம்.

ஆனால் அவர்கள் இராணுவத்துடன் பேசிப்பார்ப்போம்; இராணுவம் அதற்கு விட்டுக்கொடுக்காது என்று கூறிச் சென்றுள்ளார்கள்.

### பலாபலன் என்ன?

அப்படியானால் இந்த மூன்று சுற்றுப் பேச்சுக்களில் நாம் கண்ட பலாபலன்தான் என்ன?

ஒட்டுமொத்தமான பலாபலன் என்னவென்றால் இந்தப் போர் நிறுத்தம்தான்; ஒரு சமாதான சூழ்நிலையை நாம் ஏற்படுத்தியுள்ளோம். விடுதலைப் புலிகளின் முழு முயற்சியுடனும் ஒத்துழைப்புடனும் இந்தப் போர் நிறுத்தம் கடைப்பிடிக்கப்படுகின்றது.

இந்தப் போர்நிறுத்தத்தை எக்காரணம் கொண்டும் விடுதலைப் புலிகள் மீறமாட்டார்கள். போர் நிறுத்தத்தில் நாம் உறுதியாக இருக்கின்றோம்; தலைவர் அதை வலியுறுத்திக் கூறியுள்ளார்.

ஆனால் எங்களுக்கு கிழக்கு மாகாணத்திற் பிரச்சினைகள் உள்ளன.

கிழக்கு மாகாணத்தில் எமது போராளிகள் சுதந்திரமாக நடமாடக்கூடாது; ஆயுதங்களைத் தரித்திருக்கக் கூடாது; ராணுவ சோதனைகளுக்கு உட்பட்டுத்தான் போகவேண்டும் என இராணுவம் சில பிரச்சினைகளை முன்வைக்கின்றது.

இந்தப் பிரச்சினைகள் சுமுகமாகத் தீர்க்கப்படும் என நாம் கருதுகின்றோம்.

அப்படித் தீர்க்கப்பட்டால் ஒரு நிலையான உறுதியான போர் நிறுத்தம் ஏற்படும்.

நான்கு ஆண்டுகள் தொடர்ச்சியான போராட்டத்தின் பின் அத்தகைய நல்ல சூழ்நிலை — இடைவெளி — உருவாகும்.

அத்தகைய இயல்புநிலை — சமாதான சூழ்நிலை — வந்ததும் எமது மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்கள் வந்து சேரவேண்டும்; எமது மக்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்க வேண்டும்; எமது தொழிலாளர்கள் தொழிலுக்குப் போக வேண்டும்.

பொருளாதாரத் தடை நீக்கப்பட்டு, பூநகரிப் பாதையும் திறக்கப்பட்டால் பேச்சுவார்த்தையில் கணிசமான முன்னேற்றம் என்று கூறலாம்.

அடுத்த சுற்றுப் பேச்சுக்கு திகதி குறிப்பிடாதது ஏன்?

எமது கோரிக்கைகளை எல்லாம் தாங்கள் போய் நல்ல முறையில் தீர்த்து வைப்பதாகக் கூறிவிட்டு அவர்கள் சென்றுள்ளனர்.

ஆனால் அடுத்த பேச்சுக்கான திகதி குறிக்கப்படவில்லை. அது ஏன்? அதில் ஒரு சிக்கல் இருக்கின்றது. ஏனென்றால் அடுத்த முறையும் இங்கு வந்தால் இதே பிரச்சினைகள் தான் இங்கு இருக்கும்.

மூன்று தடவைகளும் இதே பிரச்சினைகளைப் பேசி, வாக்குறுதிகளைத் தந்துவிட்டு, அவற்றுக்குத் தீர்வு காணாமல் நான்காவது தடவையும் அவர்கள் என்ன முகத்துடன் இங்கு வருவார்கள்? வர முடியாது. ஆகவே பிரச்சினைகளைத் தீர்த்துவிட்டுத்தான் வர வேண்டும்.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பது குறித்து நாம் பேசத் தயார்.

ஏதோ இனப்பிரச்சினையை விட்டு நாம் வெட்டி ஓடி, அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும் என்று கூறி இனப் பிரச்சினையை ஆராயாமல் நாம் தள்ளிப்போடுவதாக சில கொழும்புப் பத்திரிகைகள் குற்றம் சாட்டியுள்ளன.

ஆனால் அப்படியில்லை. இனப்பிரச்சினை குறித்து பேசுவதற்கு நாம் தயாராக இருக்கிறோம்; இனப்பிரச்சினை குறித்துப் பேசுவதற்கு நாம் எந்தவித நிபந்தனைகளும் விதிக்கவில்லை.

ஆனால் நாங்கள் கேட்டது என்னவென்றால் —

நீங்கள் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவீர்களானால் — மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பீர்களேயானால் — ஓர் உறுதியான போர் நிறுத்தம் ஏற்பட்டது என்றால் — இயல்பு நிலை தோன்றுமேயானால் — அரசியல் பேச்சுக்களை சுமுகமாக எடுத்துச் செல்ல அது வாய்ப்பாக அமையும் என்றுதான் நாம் கோருகின்றோம்.

அன்றாடப் பிரச்சினைகள் தீர்ந்த அடுத்த கட்டமாக இனப்பிரச்சினை குறித்து பேச நாம் தயாராக உள்ளோம்.

அன்றாடப் பிரச்சினைகளும் இனப்பிரச்சினையின் ஓர் அம்சமே. முன்னைய அரசாங்கத்தின் ஒடுக்கு முறைகளால் ஏற்பட்ட விளைவுகளே இந்த அன்றாடப் பிரச்சினைகளாகும். இதைத் தீர்த்து வைப்பதும் இனப்பிரச்சினையின் ஓர் அம்சத்தைத் தீர்த்து வைப்பதாகவே அமையும்.

### இனப்பிரச்சினைக்கு சமாதானத்தீர்வு

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு ஒரு திட்டம் ஒன்றைத் தாங்கள் தயாரித்துக் கொண்டிருப்பதாக ஸ்ரீலங்கா அரசு கூறுகின்றது, அந்த தீர்வுத் திட்டத்தை எமது பரிசிலனைக்காக எங்கள் முன் வைக்கப் போவதாகவும் கூறுகின்றார்கள். நாம் அதைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றோம்.

நீங்கள் தீர்வுத்திட்டத்தை முன்வைத்தால் நாம் அதனைப் பரிசிலிக்கத் தயாராக இருக்கின்றோம்.

எமது கொள்கை என்னவென்பது உங்களுக்குத் தெரியும். விடுதலைப் புலிகள் இயக்கம் கடந்த இரண்டு தசாப்தங்களாக — இருபது ஆண்டுகளாக — இரத்தம் சிந்தி ஓர் இலட்சியத்துக்காகப் போராடிவரும் ஓர் இயக்கம்.

தமிழ் மக்களுக்கு ஒரு தனியரசு வேண்டும்; தனித்துவமான இறைமையுடைய ஓர் ஆட்சி வேண்டும் என்ற இலட்சியத்தை வரித்து நாம் போராடிக் கொண்டிருக்கிறோம்.

ஆனாலும் ஸ்ரீலங்கா எமது மக்களின் தேசிய அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் வகையில்—எமது மக்கள் நிம்மதியாக, சுதந்திரமாக, கௌரவமாக வாழும் வகையில் ஓர் உருப்படியான மாற்றுத் திட்டத்தை தந்தால் — தீர்வுத் திட்டத்தை முன்வைத்தால் — அதைப் பரிசீலிப்பதாக எமது தலைவர் பகிரங்கமாகக் கூறியிருக்கின்றார். ஆகவே மாற்றுத் திட்டத்தை அவர்கள் முதலில் தர வேண்டும்.

அவர்கள் ஒரு திட்டத்தை தயாரிக்கின்றார்கள் அந்தத் திட்டத்தை எம்மிடம் தந்தால் நாம் அதை பரிசீலிப்போம்; அதைப் பற்றி விவாதிப்போம்.

ஆனால் பண்டாரநாயக்கா — செல்வநாயகம் ஒப்பந்தத்தின் அடிப்படையிலான திட்டம் ஒன்றை தாங்கள் தயாரிப்பதாக சந்திரிகா கூறியுள்ளார்.

நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் — 1957 இல் செய்து கொள்ளப்பட்ட ஓர் இடைக்கால உடன்பாடு தான் பண்டாரநாயக்கா — செல்வநாயகம் ஒப்பந்தம்; அது ஒரு முழுமையான தீர்வுத் திட்டம் அல்ல; சிறிய — சுருக்கமான இடைக்காலத் தீர்வாகப் பிரேரிக்கப்பட்ட திட்டம்.

அந்தத் திட்டத்தின்படி — வடமாகாணத்தில்ஒரு பிரதேச சபை; கிழக்கு மாகாணத்தில் ஒன்று அல்லது இரண்டு அல்லது மூன்று பிரதேச சபைகள் இருக்கும். அவை நினைத்தால் சேரலாம் அந்த பிரதேச சபைகளுக்கு குறித்த துறைகள் ஒதுக்கப்பட்டிருந்தன.

இதற்கு மேலாக அந்த பிரதேச சபை அமைப்பை ஓர் மாநில சுயாட்சி அதிகாரம் கொண்ட ஒரு முழுமையான தீர்வுத் திட்டமாக நாம் ஏற்கமுடியாது; அதனடிப்படையில் தீர்வுத் திட்டம் கொண்டு வருவதாக இருந்தாலும் அது எமது மக்களுக்கு திருப்தியுடைய திட்டமாக இருக்காது.

40 ஆண்டு காலம் நாம் போராடி இருக்கின்றோம்,

வரலாற்றுப் புதைகுழியிலிருந்து ஓர் எலும்பைத் தூக்கி எமக்குத் தரக்கூடாது.

சந்திரிகா தமது தந்தையாரின் வழியில் போக விரும்பினால் —

இன்னும் 70 ஆண்டுகள் பின்னால் சென்று, 1927ஆம் ஆண்டு பண்டாரநாயக்கா கூறியதை—தமிழ் மக்களுக்கு சமஷ்டி சுயாட்சி அதிகாரம் வழங்க வேண்டும் — எனப் பகிரங்கமாகக் கூறியபடி அந்தத் திட்டத்துக்குப் போகலாம்.

40 வருடத்திலிருந்து எழுபது வருடங்களுக்கு பின்னோக்கிச் சென்று வரலாற்றுப் புதைகுழியிலிருந்து இப்படியான விடயங்களைத் தோண்டி எடுங்கள்.

நீண்டகால போராட்டத்தின் பின்னர் எமது மக்கள் எமது மண்ணில் ஓர் ஆட்சி அதிகாரமுடைய கட்டமைப்பைத் தோற்றுவித்து சுதந்திர பிரஜைகளாக வாழும் காலகட்டம் இது.

செல்வநாயகம் அவர்களுடைய காலகட்டம் வேறு: பிரபாகரனின் காலகட்டம் வேறு.

அந்தக் காலகட்டத்தில் செல்வநாயகம் சமஷ்டியைக் கைவிட்டு, ஏதாவது ஒரு தற்காலிக உடன்பாட்டுக்குப் போவதற்கு இணங்கியிருந்தார். அந்த ஒப்பந்தத்தைக் கூட நீங்கள் பின்னர் கிழித்து எறிந்து விட்டீர்கள்.

ஆனால் இந்தக் காலம் வேறு. இது பிரபாகரனின் யுகம். இருபது ஆண்டுகாலம் இரத்தம் சிந்திப் போராடி நாம் பெரிய சாதனைகளைச் செய்திருக்கின்றோம்.

30 ஆயிரம் மக்கள் செத்திருக்கின்றார்கள்; சுமார் ஏழாயிரம் போராளிகள் வீரமரணம் அடைந்திருக்கின்றார்கள்; அற்புதமான தியாகங்கள், அர்ப்பணிப்புக்கள் இங்கு புரியப்பட்டுள்ளன. எமது போராட்டம் எத்தனையோ கட்டத்துக்கு வளர்ச்சியுற்றிருக்கிறது.

பெரிய சுயாட்சி அமைப்புகளை இங்கு ஏற்படுத்தியுள்ளோம்; காவல்துறை, நீதித்துறை, நிர்வாகத் துறை, நிதித்துறை என பல கட்டுமானங்களைக் கட்டி எழுப்பியுள்ளோம். இங்கு ஒரு சுயாட்சி உள்ளது.

ஆகவே இந்த வளர்ச்சியைக் கருத்தில் எடுத்து ஒரு தீர்வுத் திட்டத்தை சந்திரிகா அரசு முன்வைக்க வேண்டும்.

என்னமாதிரியான தீர்வுத் திட்டம் என்பதை ஓரளவில் தலைவர் கூறியிருக்கின்றார்.

வடக்கு — கிழக்கு என எமது தாயகப் பூமியை இணைந்ததாக தன்னாட்சி உடைய — சமஷ்டிக் கட்டமைப்பை நீங்கள் தந்தால் அதை நாம் பரிசீலனை செய்வோம்.

எத்தனையோ இழப்புக்களை சந்தித்த பின்னர் — இன்று பலமான ஓர் அத்திவாரத்தில் நின்றுகொண்டு — நாம் பலவீனப்பட்டுப்போய் ஏதாவது ஒன்றைத் தருமாறு நாம் கேட்கக்கூடாது. நாங்கள் இறுக்கமாக — உறுதியாக நின்று ஒரு நிரந்தரமான — நிலையான — தீர்வை எடுக்க வேண்டும்.

அரசியல் தீர்வாக இருந்தால் அது எமது மக்களின் சுதந்திரத்தை — கௌரவத்தை — பாதுகாப்பை — பேணுவதாக இருக்க வேண்டும்.

ஏற்கனவே ''தமிழீழம்'' பிரிந்து போய்விட்டதாக சந்திரிகா தேர்தல் பிரசாரத்தில் கூறியிருக்கின்றார். தனியரசு ஒன்றை அங்கு பிரபாகரன் நடத்திக்கொண்டிருப்பதாகவும் தான் ஆட்சிக்கு வந்தால் தமிழ் மாநிலத்தை சிங்கள தேசத்துடன் ஒன்றிணைக்கப்போவதாகவும் சந்திரிகா கூறியுள்ளார்.

அப்படி ஒன்று சேர்ப்பதாயின் சும்மா சேர்க்க முடியாது; தமிழ் மக்களின் சகல உரிமைகளும் வழங்கப்படவேண்டும்.]

அப்படியான தீர்வு ஒன்றினை நீங்கள் தந்தால் அதை ஆக்கபூர்வமான முறையில் பரிசிலிக்க நாம் தயார்.

நாங்கள் மிக உன்னிப்பாக — மிக நிதானமாக — மிகக் கவனமாக — இந்தப் பேச்சுக்களில் கலந்து கொண்டிருக்கின்றோம்.

யுத்த நிறுத்தத்தை மீறுகின்ற அல்லது பேச்சுக்களைக் குழப்பும் எண்ணம் எமக்கு இல்லை இதை ''சீரியஸாக'' எடுத்து; இந்த அரசு எவ்வளவுக்கு எமக்கு நீதி வழங்கப் போகின்றது என்பதை நாம் பார்க்கத்தான் போகின்றோம்.

சந்திரிகா அரசு முந்திய போரினவாத அரசுகளை விட முற்போக்கானது என்பது எமக்குத் தெரியும்.

இராணுவ ரீதியில் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது; சமாதான வழியில் தான் இப்பிரச்சினையைத் தீர்க்க முடியும்; புலிகளுடன் பேசித்தான் இந்தச்சமாதான தீர்வைக் காணமுடியும் — என்ற ஒரு நிலைப்பாட்டைச் சந்திரிகா எடுத்தார். அந்த நிலைப்பாடு முற்போக்கானது:

அந்த நிலைப்பாட்டில் நின்று கொண்டு மக்களிடம் சந்திரிகா ஓர் ஆணையைப் பெற்றார்.

ஆகவே சந்திரிகா துணிந்து — தைரியத்துடன் — இராணுவ அழுத்தங்களுக்கு விட்டுக் கொடுக்காமல் சில முடிவுகளை எடுக்க வேண்டும். தமிழ் மக்களின் அபிலாசைகளை தீர்க்க அவர் முன்வர வேண்டும்.

நேர்மையான — உண்மையான — பாதையில் அவர் செல்வாரானால் அவருக்கு நேசக்கரம் நீட்டி, அவருடன் ஒத்துழைத்து: இப்பிரச்சினையைத் தீர்த்து வைக்க நாம் தயாராக இருக்கிறோம்.

இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் முழுப் பொறுப்பும் ஸ்ரீலங்கா அரசிடமே உள்ளது. இராணுவ அழுத்தங்களுக்குப் பயந்து போருபாயங்களைக் கைவிடாமல்— சிங்கள பேரினவாத சக்திகளுக்கு அடிபணிந்து — இந்தப் பேச்சுவாத்தைகளில் எமது மக்களுக்கு நீதி வழங்கத் தவறினால் அது சந்திரிகா அம்மையார் செய்யும் ஒரு பெரிய வரலாற்றுத் தவறாக அமைந்துவிடும்— என்றார்] (உ-3-9)

## 20 எம். பிக்கள்...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

சரை தனிமையில் சந்தித்துப் பேசி, தாங்கள் சுமார் இருபது பேர் வரை கட்சி மாறுவதற்கு தயாராக இருப்பதாக உறுதியளித்தார்.

''முன்னாள் சு.கவினரும், காமினியின் தீவிர ஆதரவாளர்களுமான நாங்கள் இருபது பேர் உங்கள் பக்கம் சாயத் தயாராக இருக்கிறோம் ஆனால் நாங்கள் கட்சி மாறினால் எங்களது எம்.பி பதவி பறிபோய்விடும். ஆகவே எம்.பிக்கள்] கட்சி மாறினாலும் பதவி பறிபோகாது என்பதை உறுதிப்படுத்தும் சட்ட மூலத்தை முதலில் கொண்டு வாருங்கள். அதனை நாம் ஆதரித்து வாக்களித்து, நிறைவேற்றிய பின்னர் உங்கள் கட்சிக்கு வருகிறோம்''—என்று சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் அவர் கூறினாராம்.

சம்பந்தப்பட்ட ஐ.தே.க. அதிருப்திக் குழுவினரை ஜனாதிபதி சந்திரிகாவுடன் நேரில் சந்தித்துப் பேச வைப்பதற்கான ஏற்பாடுகள் தற்போது இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

... 17-01-1995 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org